வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 26.12.2024 வியாழக்கிழமை இதழ் : 360 பக்கங்கள் : 12




## மனித நேயம், சுதந்திரம் நிறைந்த அழகான நாட்டை உருவாக்குவோம்

### நத்தார் வாழ்த்தில் ஜனாதிபதி அநுர



கொழும்பு, டிசெ. 26

மனிதநேயம் மற்றும் சுதந்திரம் நிறைந்த ஒரு அழகான நாட்டை உருவாக்கவும், சமூக கட்டமைப்பை நல்வழிப்படுத்தி மகிழ்ச்சிகரமான சமூகமொன்றுக்காகவும், பிரஜைகள் என்ற வகையில் நாம் அனைவரும் கைகோர்க்க உறுதி பூணுவோம் என ஜனாதிபதி அநுகுமார திஸநாயக்க தனது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

11



யாழ்.மறை மாவட்டத்திற்கான பிரதான நத்தார் நள்ளிரவு திருப்பலி யாழ்.புனித மரியன்னை பேராலயத்தில் யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் கூட்டு திருப்பலியாக ஒப்புக்கொடுக்கப்பட்டது. (படங்கள் : ஐ.சிவசாந்தன்)

# வடக்கில் இராணுவ காணிகளை அல்ல சொந்த நிலங்களையே கோரும் மக்கள்!

### தென்னிலங்கை சிவில் சமூகத்திடம் சுட்டிக்காட்டினார் மாகாண ஆளுநர்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 26

இராணுவத்தினரின் காணிகளை வடக்கு மக்கள் விடுவிக்கக் கோரவில்லை. அவர்களின் சொந்தக் காணிகளையே விடுவிக்கக் கோருகின்றார்கள் என்ற தெளிவுபடுத்தலை தென்னிலங்கை மக்களுக்கு எடுத்துச் சொல்லுமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையைச் சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்துள்ளேன் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

11



## தேசிய பாதுகாப்பு தினம் இன்று!

கொழும்பு,டிசெ. 26

ஆழிப் பேரலை ஏற்பட்டு 20 ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இன்று தேசிய பாதுகாப்பு தினம் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அதற்கமைய ஆழிப் பேரலையினால் உயிரிழந்த மக்களை நினைவுகூரும் வகையில் நாடு முழுவதும் இன்று முற்பகல் 9.25 முதல் 9.27 வரை இரண்டு நிமிடங்கள் மௌன அஞ்சலி செலுத்துமாறு அனர்த்த முகாமைத்துவ

11

## இலங்கையுடன் உயர்மட்ட தொடர்பை பேணத் தயார்!

### சீன வெளிவிவகாரப் பேச்சாளர்

கொழும்பு, டிசெ. 26

சீனாவும், இலங்கையும் ஒருவருக்கொருவர் அவசியமான உதவிகளை வழங்குகின்ற, நீண்டகால நட்புறவைக் கொண்டிருக்கின்ற ஒத்துழைப்புப் பங்காண்மை நாடுகளாகும். அதன்படி இலங்கையுடன் மிகநெருங்கிய உயர்மட்டத் தொடர்பைப் பேணுவதற்குத் தாம் தயாராக இருப்பதாக சீன வெளிவிவகாரப் பேச்சாளர் மாவோ நிங் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அவரது பதவி யேற்பின் பின்னர் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் முதலாவதாக இந்தியாவுக்கான

11

## மகிந்தவின் பாதுகாப்பு நீக்கம் நீதிமன்றத்தை நாடும் பெரமுன

கொழும்பு, டிசெ. 26

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராசபக்ஷவின் பாதுகாப்பு நீக்க விவகாரத்தை நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக பொதுஜன பெரமுனவின் தேசிய செயற்குழு உறுப்பினர் ரவீந்திர ஜயசிங்க தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் நேற்று கலந்துகொண்டபோதே அவர் இதனை வெளிப்படுத்தினர்.

பாதுகாப்பு காரணங்களுக்காக பொலிஸ் உத்தியோகத்தர்களை பதவி நீக்கம் செய்வது அவசியமானது என கருதப்பட்டாலும் பொருளாதார காரணங்களுக்காக முப்படையினரை நீக்குவதை ஏற்றுக்கொள்ள முடியாது என ரவீந்திர ஜயசிங்க கூறினார். (அ)

## வாகன இறக்குமதி வரி தொடர்பில் இதுவரை தீர்மானிக்கப்படவில்லை

கொழும்பு, டிசெ. 26

வாகன இறக்குமதிக்கு விதிக்கப்படும் வரி தொடர்பில் இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை என அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்காலத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இறக்குமதி செய்யப்படும் வாகனங்கள் மற்றும் அவை இறக்குமதி செய்யப்படும் திகதிகள் ஏற்கனவே முடிவு செய்யப்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்தார். (அ)

## சில அத்தியாவசிய பொருட்களின் விலை இந்த வாரத்தில் குறையும்!

கொழும்பு, டிசெ. 26

பல அத்தியாவசியப் பொருட்களின் விலைகளை இந்த வாரம் குறைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இறக்குமதியாளர்கள் மற்றும் உற்பத்தியாளர்களுடன் கலந்துரையாடிய நிலையில், அத்தியாவசியப் பொருட்களை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாக வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்தார்.

சந்தையில் ரின் மீனின் விலை தற்போது 425 தொடக்கம் 490 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

எனினும் அதனை உள்ளூர் உற்பத்தியாளர்கள் 300 ரூபா என தெரிவிப்பதாக அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

11

### கோடிக்கணக்கில் நிதி மோசடி

## அரசியல்வாதிகளுக்கு எதிராக விசாரணை கோருகிறார் எஸ்.பி.

கொழும்பு, டிசெ. 26

அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி அரசியல்வாதிகள் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து கோடிக்கணக்கில் நிதி பெற்றுள்ளமை முறையற்றதொரு செயற்பாடாகும். முறையான விசாரணைகளை மேற்கொண்டு நிதியை மீளப்பெறுவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

11

## உதய கம்மன்பில அரசுக்கு கற்பிக்கவேண்டியதில்லை!

### அமைச்சர் நளிந்த பதிலடி



கொழும்பு, டிசெ. 26

அரசியலமைப்பு மற்றும் அது குறித்த சட்டம் தொடர்பில் நாம் முழுமையான புரிதலுடனேயே செயற்படுகின்றோம். எனவே உதய கம்மன்பில இது குறித்து அரசாங்கத்துக்கு கற்பிக்க வேண்டிய அவசியமில்லை என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

அரசியலமைப்பு தொடர்பிலும் அது தொடர்பான சட்டம் தொடர்பிலும் முழுமையாக புரிதலுடனேயே நாம் செயற்பட்டு வருகின்றோம். கம்மன்பிலவினர் செய்த சேவைகளின் பலனையே

11

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னேற்றத்தை நோக்கி தொடர்ந்து பணியாற்ற அனைவருக்கும் அழைப்பு

## நத்தார் வாழ்த்தில் விடுத்தார் வடக்கு ஆளுநர்

யாழ்ப்பாணம், டிசெ. 26

புத்தாண்டை நெருங்கி வரும் இவ்வேளையில், எமது தேசத்துக்கு, அமைதி, செழிப்பு மற்றும் முன்னேற்றத்தை நோக்கி தொடர்ந்து பணியாற்ற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன் என வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தனது கிறிஸ்மஸ் வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாடும் அனைவருக்கும் எனது அன்பான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த பாலன் பிறப்பை நாம் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் கொண்டாடுகையில் கிறிஸ்மஸின் உண்மையான உணர்வை நினைவில் கொள்வோம்.

அன்பை - கருணையைப் பரப்புதல், மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுதல், மற்றவர்களுக்கு இரங்குதல் - உதவி செய்தல் மற்றும் அனைத்து சமுகங்களிடையேயும் நல்லிணக்கத்தை வளர்ப்பது என்ற எண்ணங்களை மனதிலிருத்து வோம்.

இந்த மகிழ்ச்சியான பண்டிகையை நாம் கொண்டாடும் போது, எம்மைச் சூழ்ந்திருப்பவர்களில் உதவிகள் தேவைப்படுபவர்களுக்கு நம் இதயங்களையும் கைகளையும் நீட்டுவோம்.

புத்தாண்டை நெருங்கி வரும் இவ் வேளையில், வடக்கு மாகாணத்துக்கும் எமது தேசத்துக்கும், அமைதி, செழிப்பு மற்றும் முன்னேற்றத்தை நோக்கி தொடர்ந்து பணியாற்ற உங்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றேன்.

கிறிஸ்துமஸின் ஒளி நம் பாதைகளை வழிநடத்தட்டும், மேலும் இந்தப் பண்டிகையின் ஆசீர்வாதங்கள் உங்களுக்கும் உங்கள் குடும்பங்களுக்கும் மகிழ்ச்சியையும் நிறைவையும் கொண்டு வரட்டும் - என்றார். (அ)

# புங்குடுதீவுப் பிரதேசத்தில் பல்வேறு குற்றச்செயல்கள்

## கட்டுப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ. 26

புங்குடுதீவு சித்தி விநாயகர் மகா வித்தியாலயத்துக்கு அருகாமையில் பல்வேறு குற்றச் செயல்கள் இடம்பெறுவதாகவும் இது குறித்து பொலிஸாருக்கு அறிவித்தல் வழங்கியும் அவர்கள் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கவில்லை என அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில் -

குறித்த பகுதியில் திருட்டு மாடுகளை இறைச்சிக்காக கொலை செய்தல், கசிப்பு உற்பத்தி மற்றும் வியாபாரம் என்பன இடம்பெறுகின்றன. இது குறித்து குறிகாட்டுவானில் இயங்கும் உப பொலிஸ் நிலையத்துக்கு பல தடவைகள் முறைப்பாடு செய்தும், அவர்கள் அதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. பொலிஸாருக்கும், குறித்த குற்றச் செயல்களை செய்பவர்களுக்கும் இடையே தொடர்புகள் காணப்படுகின்றதா என்ற சந்தேகமும் எழுகின்றது.

கசிப்பு வியாபாரத்தினால் மாணவர்களது கல்வி பாதிக்கப்படுகிறது. பிள்ளைகளை தனியே பாடாசாலைக்கு அனுப்புவதற்கு பயமாக உள்ளது. பெண்கள் வீதியில் தனியாக நடமாடுவதற்கு பாதுகாப்பற்ற நிலைமை காணப்படுகிறது. எனவே இதற்கு உரிய அதிகாரிகள் ஒரு சிறந்த தீர்வு வழங்கு வேண்டும் - என்றனர். (அ-05)

# விபத்தில் காயமடைந்த முதியவர் உயிரிழப்பு!

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ்ப்பாணத்தில் விபத்தில் படுகாயமடைந்த முதியவர் ஒருவர நேற்றைய தினம் உயிரிழந்துள்ளார். யாழ்ப்பாணம் - வண்ணார்பண்ணை பகுதியைச் சேர்ந்த நடராசா நாகராசா (வயது 76) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது -

இவர் கடந்த 8ஆம் திகதி மகள் வீட்டுக்கு செல்வதற்காக கல்வியங்காடு - ஜமுனா வீதி ஊடாக துவிச்சக்கர வண்டியில் பயணித்துக்கொண்டிருந்தார். பின்னர் ஓய்வு எடுப்பதற்காக அந்த வீதியில் சிறிது நேரம் நின்றுகொண்டிருந்தார். அவருக்கு அருகே மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது.

இதன்போது கல்வியங்காடு பகுதியில் இருந்து வந்து கொண்டிருந்த கார் ஒன்று மோட்டார் சைக்கிள் மீது மோதியபோது, குறித்த மோட்டார் சைக்கிள் அருகில் நின்ற முதியவர் மீது மோதியது.

இந்நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சையின் பின் கடந்த 10ஆம் திகதி வீடு சென்றுள்ளார். இருப்பினும் இன்று காலை வீட்டில் உயிரிழந்தார் அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (05)

# பருத்தித்துறையில் எலிக்காய்ச்சல் அறிகுறி; இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதி!

யாழ்ப்பாணம், டிசெ. 26

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவில் எலிக்காய்ச்சல் அறிகுறிகளுடன் நேற்று முன்தினம் இருவர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

4 நாட்கள் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட மேற்படி இருவரும் நோய் மிகவும் தீவிரமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

"மக்கள் தற்போது முன்னெடுக்கும் தடுப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து பின்பற்ற வேண்டும். ஆரம்பத்திலேயே வைத்தியசாலைக்கு வர வேண்டும். சிகிச்சை எடுக்க வேண்டும். இதன் மூலம் நோய் தீவிரமாகுவதையும் இறப்பையும் தடுக்கலாம், குறைக்கலாம்." - என்று பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் வைத்தியர்கள் அறிவுறுத்தியுள்ளனர். (அ)

# யாழ்,காரைநகர் இ.போ.ச. சாலை ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 26

இலங்கை போக்குவரத்துச் சபையின் யாழ்ப்பாணம், காரைநகர் சாலைகளின் ஊழியர்கள் நேற்று பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால், போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் இரண்டு ஊழியர்கள் கத்திக்குத்துக்கு இலக்காகினர். யாழ்ப்பாணம், காரைநகர் சாலைகளைச் சேர்ந்த சாரதியும், நடத்துனருமே பாதிக்கப்பட்டனர்.

தாக்குதலை நடத்திய 3 பேரும் தப்பிச் சென்றனர்.

தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரி யாழ், காரைநகர் சாலை ஊழியர்கள் பணிபுறக்கணிப்பில் ஈடுபட்டனர். இதனால் போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன. (அ)

# இணுவிலில் குடும்பம் மீது கொலைவெறித் தாக்குதல்!

## சிறுவன் உட்பட நால்வருக்குப் பாதிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 26

சுன்னாகம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இணுவில் பகுதியில் ஒரே குடும்பத்தை சேர்ந்த நால்வர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இருவர் படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இணுவில் பகுதியில் அயலில் உள்ள இரண்டு குடும்பங்கள், தங்கள் தங்கள் வீட்டில் இரண்டு கோயில்களை ஆதரித்து வருகின்றனர். இந்நிலையில் இரண்டு குடும்பத்துக்கும் இடையே முரண்பாடு இருந்துள்ளது.

இந்நிலையில் நேற்றுமுன்தினம் பாதிக்கப்பட்ட குறித்த சிறுவன் பூ பறிப்பதற்காக வீதியில் சென்றுகொண்டிருந்த வேளை அயல் வீட்டு இளைஞர் குறித்த சிறுவனுடன் முரண்பட்டுவிட்டு தாக்குதல் நடத்தியுள்ளார். இதன்போது சிறுவன் தனது வீடு நோக்கி ஓடிவந்தபோது வளை தாக்கிய இளைஞனும்,



அவரது தந்தையும் சிறுவனை துரத்திக்கொண்டு வந்தனர்.

இதன்போது தனது மகனின் அழுகைக் குரலை கேட்ட தந்தை எழுந்து வீட்டுக்கு வெளியே வந்தவேளை கொட்டனுடன் வந்த இளைஞனும், தந்தையும் பாதிக்கப்பட்ட சிறுவனின் தந்தை மீது தாக்குதல் மேற்கொண்டனர். இந்நிலையில் அவர் மயங்கி கீழே விழுந்தபோது அவரது மனைவி ஓடி வந்தவேளை அவர் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டது. குறித்த பெண் அறுவைச் சிகிச்சை மூலம் குழந்தை பெற்றெடுத்து மூன்று மாதங்களே நிரம்பிய நிலையில் அவரது வயிற்றில் தாக்குதல் நடத்தப்பட்டது. தனது மகள் மீது தாக்குதல் நடத்துவதை தடுப்பதற்கு வந்த தாய் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டு அவரும் படுகாயமடைந்துள்ளார்.

இந்நிலையில் படுகாயமடைந்த மாமியாரும் மருமகனும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டதுடன், தனது ஏனைய பிள்ளைகளை வீட்டில் இருந்து கவனிக்க யாரும் இல்லாத காரணத்தினால் குறித்த குடும்பப் பெண் வைத்தியசாலைக்குச் செல்லாமல் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் சுன்னாகம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# அரிசி விலை தொடர்பில் கலந்துரையாடவில்லை!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, டிசெ. 26

அரிசிக்கான கட்டுப்பாட்டு விலையில் மாற்றம் மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கம் எந்தவொரு கலந்துரையாடலையும் முன்னெடுக்கவில்லை என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

நாட்டில் நிலவும் அரிசிக்கான தட்டுப்பாட்டை நிவர்த்திக்கும் வகையில், அனுமதிப்பத்திரமின்றி அரிசி இறக்குமதி செய்வதற்கான கால அவகாசத்தை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நீடிக்கும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதேநேரம், அமைச்சரவை அங்கீகரித்த அளவுக்கு அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கத்துக்கு இயலாமல் போயுள்ளதாகவும், எதிர்வரும் காலங்களில் விநியோகஸ்தர்களிடமிருந்து எஞ்சிய அரிசி தொகை கிடைக்கப்பெறும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அரசாங்கம் சார்பில் அரிசி இறக்குமதி செய்வதற்குப் பொறுப்பளிக்கப்பட்ட அரச வர்த்தக கூட்டுத்தாபனம் மற்றும் சதொச நிறுவனத்தின் செயற்பாடுகளால் இவ்வாறு அரிசி இறக்குமதியில் தாமதம் ஏற்படவில்லை என அவர் தெரிவித்தார்.

விநியோகஸ்தர்கள் எதிர்நோக்கிய சிக்கல் காரணமாகவே, அரசாங்கம் இறக்குமதி செய்வதற்கு எதிர்பார்த்த அளவு அரிசியை, இலக்கு வைக்கப்பட்ட காலத்தினுள் இறக்குமதி செய்ய முடியாமல் போனதாக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ கூறினார். இதேவேளை, அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலைக்கு சந்தையில் அரிசியை பெறமுடியாதுள்ளதாக நுகர்வோர் தெரிவிக்கின்றனர்.

அதேநேரம், இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரியை நீக்குவதற்கு அல்லது கட்டுப்பாட்டு விலையை நீக்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என வர்த்தகர்கள் கோருகின்றனர்.

அத்துடன், இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி 220 ரூபாவுக்கே தங்களுக்கு வழங்கப்படுவதாகவும் அதனை அரசாங்கத்தின் கட்டுப்பாட்டு விலைக்கு விற்பனை செய்வது சிரமம் எனவும் வர்த்தகர்கள் கூறுகின்றனர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
26.12.2024 வியாழக்கிழமை
பிலவ வருடம், மார்கழி 11

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## ரில்வின் சில்வாபோல்...

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தன்னுடைய அனுமதியின்றி ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிப்பதற்கு தடை வித்திக்கின்றார் என்று தேசிய மக்கள் சக்தியின் அமைச்சர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார். ஜே.வி.பியை பொறுத்தவரையில் கடுமையான கட்டுப்பாடுகளை கொண்டிருக்கும் கட்சி. பொதுவாக கம்யூனிச மற்றும் ஆயுதப் பின்புலத்தின் வழியாக அரசியலுக்குள் பிரவேசித்தவர்கள் தங்களை கட்டுக்கோப்புடன் பேணிக் கொள்வதற்காக கடுமையான சில கட்டுப்பாடுகளைக் கொண்டிருப்பர்.

கம்யூனிச பின்புலம் கொண்டிருக்கும் நாடுகளின் அரசியல் நடைமுறைகளில் அதன் கட்டுப்பாடு தெளிவாகத் தெரியும் - உதாரணம் சீனா, கியூபா. ஆனால், இலங்கை போன்ற தொழிற்சங்க, சிவில் சமூக நடவடிக்கைகள் ஒப்பீட்டடிப்படையில் பலமாக இருக்கின்ற நாடுகளில் அவ்வாறான கட்டுப்பாடுகளை விதிக்க முடியாவிட்டாலும் கூட, ஜே.வி.பி. சில ஒழுங்குமுறைகளை பின்பற்றிவருகின்றது. தற்போது ஆட்சியதிகாரத்தை கைப்பற்றியிருக்கும் நிலையில் அதனை இன்னும் இறுக்கமாகப் பேணிக் கொள்ள அவர்கள் முயற்சிக்கக் கூடும்.

ரில்வின் சில்வாவை பொறுத்தவரையில் அவர் தேர்தல் அரசியலில் பங்குகொள்வதில்லை - பொதுச் செயலாளருக்கான கட்டுப்பாடுகள் அங்குண்டு. ஆனால், அவருக்கான அதிக அதிகாரங்களும் உண்டு. தேர்தல் அரசியலில் பதவி நிலைகளை பெற்றுக் கொள்ளும் ஒருவரை விடவும் ரில்வின் சில்வாவின் அதிகாரங்கள் அதிகமானது. கட்சிரீதியாக எவரையும் ரில்வினால் கட்டுப்படுத்த முடியும். தற்போதுள்ள நிலையில் அநுரகுமாரவுக்கு அடுத்த நிலையில் அதிகாரமுள்ள ஒருவர் என்றால் அது ரில்வின் சில்வாதான்.

இந்த அனுபவத்தின் வழியாக தமிழ் கட்சிகளை நோக்கினால் மலைக்கும் மடுவுக்குமுள்ள வேறுபாட்டை நோக்கலாம். இலங்கை தமிழ் அரசு கட்சியைப் பொறுத்தவரையில் மத்திய குழுவில் உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருமே தலைவர்கள் போன்றே கருத்துகளை தெரிவிக்கின்றனர். கட்சிக்குள் புதிதாக வந்த ஒருவர் கூட நாற்பது வருடங்களுக்கு மேலாக கட்சியிலிருக்கும் ஒருவரை பார்த்து, வாயை மூடு என்று சொல்லக் கூடியளவிற்கு அதிகாரமுள்ளவராக இருக்கின்றார். எவர் வேண்டுமானாலும் கட்சிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யலாம் என்னும் நிலைமை காணப்படுகின்றது. கேட்டால் ஜனநாயக கட்சியென்றால் அப்படித்தான் என்று பதில் சொல்லப்படுகின்றது. ஜனநாயகம் என்றால் நீதிமன்றத்துக்கு செல்ல வேண்டும் என்னும் புதிய பாடத்தை தமிழ் அரசு கட்சி அதன் அங்கத்தவர்களுக்கு கற்பித்துக் கொண்டிருக்கின்றது.

ஆயுத விடுதலைப் போராட்ட பின்புலத்திலிருந்து கட்சி அரசியலுக்கு வந்தவர்களின் நிலைமையோ, மிகவும் கவலைக்கிடமானது. கட்சியின் மத்திய குழுவை நான்கு பேர் பயணம் செய்யக் கூடிய வாகனமொன்றில் ஏற்றிக்கொண்டு செல்லுமளவிற்கே சில கட்சிகள் இருக்கின்றன. கட்சியின் தலைவரும் செயலாளரும் இல்லையொன்றால் கட்சியில்லை என்னும் நிலையில்தான் சில கட்சிகள் இருக்கின்றன. அடிப்படையில், கட்சிகளின் நிர்வாகப் பொறுப்புகளில் இருப்பவர்கள் தேர்தல் அரசியலில் பங்குகொள்ளக் கூடாது. கட்சியை வழிநடத்துவதே அவர்களின் பொறுப்பாக இருக்க வேண்டும்.

தமிழ் கட்சிகளில் கட்டுக் கோப்பு என்று சொல்லக் கூடியளவுக்கு எதுவுமேயில்லை. இந்த நிலையில் இந்தக் கட்சிகளால் எவ்வாறு கொழும்போடு பேரம் பேச முடியும்?

இதற்கு காரணம் கட்சிகளின் வளர்ச்சியை பற்றி சிந்திப்பதற்கு பதிலாக தாங்கள் எப்படியாவது நாடாளுமன்றம் சென்றுவிட வேண்டும் என்பதே தமிழ் கட்சிகளின் தலைவர்கள், செயலாளர்கள் என்போரின் ஒரேயொரு குறிக்கோளாக இருக்கின்றது.

# முல்லையில் இறங்குதுறை இல்லாததால் அவலநிலையை எதிர்கொண்ட அகதிகள்

முல்லைத்தீவு, டிசெ.26

முல்லைத்தீவு மாவட்டத்தில் உரிய இறங்குதுறை ஒன்று இல்லாததால்தான் ரோஹிங்கியா அகதிகள் திருகோணமலை கொண்டு செல்லப்பட்டு மீண்டும் முல்லைத்தீவு கேப்பாபிலவுக்கு கொண்டுவரப்பட்டனர் என்று முள்ளிவாய்க்கால் மேற்கு வளர்மதி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்க தலைவர் ஆறுமுகம் சிவனேஸ்வரன் தெரிவித்தார்.

முல்லைத்தீவு ஊடக அமையத்தில் நேற்றைய தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

மிக நீண்டகாலமாக முல்லைத்தீவு கடல் பிரதேசத்தில் இந்திய இழுவைமடிப்படகு பிரச்னை காணப்படுகின்றது.

ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கடந்த வாரம் இந்தியாவுக்கு சென்றிருந்தார். அங்கு இருநாட்டு மீனவர் சம்மந்தமான விடயங்கள் ஆராயப்பட்டன.

எனவே, 2025ஆம் ஆண்டு தொடக்கம் இந்திய இழுவைப் படகு விடயம் ஆராயப்பட்டு கதைத்து முடிவெடுப்பார்கள் என்று நம்புகின்றோம். இந்திய இழுவைமடிப் படகுகள் எங்கள் கடலில் அத்து மீறுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இந்திய இழுவைமடிப் படகை தடுத்து நிறுத்தினால்தான் எங்கள் பிரதேசங் களில் தடைசெய்யப்பட்ட தொழில்களான சுருக்கு வலை, வெடி வைத்து மீன் பிடித்தல் போன்றனவற்றையும் முற்றாகக் கட்டுப்படுத்தி கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தக் கூடியவாறு இருக்கும் - என்றார்.(எ)

# கழுத்தில் பாய்ந்த கூரிய தடி வெற்றிகரமாக அகற்றப்பட்டது

வவுனியா, டிசெ.26

வவுனியா பொது மருத்து வமனையில் கழுத்தில் கூரிய தடி ஒன்று குத்தி மறுபக்கம் வந்து உயிருக்கு ஆபத்தான நிலையில் சேர்க்கப்பட்ட முதியவருக்கு மருத்துவர்கள் மேற் கொண்ட சத்திர சிகிச்சையால் அந்தத் தடி அகற்றப்பட்டதுடன் அவர் உயிராபத்தின்றி காப்பாற்றப்பட்டார்.





குறித்த சத்திர சிகிச்சை நேற்று முன்தினம் இடம்பெற்றது. குறித்த முதியவருக்கு மருத்துவமனையில் உரிய நேரத்தில் விரைவாக முன்னெடுக்கப்பட்ட சத்திர சிகிச்சை மூலம் அவரது கழுத்தில் குத்திய தடி அகற்றப்பட்டதுடன் காப்பாற்றப்பட்டார்.

இந்த வெற்றிகரமான சத்திரசிகிச்சையை உணர்வழியியல் மருத்துவ நிபுணர் நாகேஸ்வரன் தலைமையிலான மயக்க மருந்து அணியினருடன் இணைந்து சத்திர சிகிச்சை நிபுணர் ரஜீவ் நிர்மலசிங்கம் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டிருந்தனர்.

(எ-10)

# நந்தவனம் மர வளர்ப்புத் திட்டத்தின் கீழ் விவேகானந்த முன்பள்ளியில் மரநடுகை

வவுனியா, டிசெ.26


இயற்கையை வளப்படுத்துவதை நோக்காகக் கொண்டு யாழ். பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியத்தால் மேற்கொள்ளப்படும் 'நந்தவனம்' மர வளர்ப்புச் செயல் திட்டத்தின் ஐந்தாம் கட்ட மரநடுகை நிகழ்வானது வவுனியா கணேசபுரம் விவேகானந்த முன்பள்ளியில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில், விவேகானந்தா முன்பள்ளி சிறார்கள், விவேகானந்தா முன்பள்ளி ஆசிரியை, மாணவர்களின் பெற்றோர்கள், கலைப்பீட மாணவர்கள், பேராதனைப் பல்கலைக்கழக மாணவரொருவர் , கேகாலைக் கல்வியல் கல்லூரி மாணவரொருவர், கலைப்பீட மாணவர் ஒன்றியத்தினர் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வு இயற்கைக்கும் மக்களுக்கும் இடையிலான நட்புணர்வின் முக்கியத்துவத்தை உணர்த்தும் நோக்குடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. (எ)



## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கல்யாணப் பேச்சு வார்த்தை சாதகமாக முடியும். கணவன்-மனைவிக்குள் ஆரோக்கியமான விவாதங்கள் வந்து போகும். எதிர்பாராத இடத்திலிருந்து உதவிகள் கிடைக்கும்.

**இடபம்**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வழக்கில் நல்ல தீர்ப்பு வரும். பொது காரியங்களில் ஈடுபடுவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணம் ஒன்று கிடைக்கும்.

**மிதுனம்**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். உங்களைச் சுற்றியிருப்பவர்களின் சுயரூபத்தை புரிந்துக் கொள்வீர்கள். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். புதுமை படைக்கும் நாள்.

**கடகம்**
மகளுக்கு நல்ல வரன் அமையும். தாய்வழி உறவினர்களுடன் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். பிள்ளைகள் கல்வியில் கவனம். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள்.

**சிம்மம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்றுத் தீரும். நினைத்ததை முடிக்கும் நாள்.

**கன்னி**
கலகலப்பான சூழல் உருவாகும். பாதியில் நின்ற வேலைகள் முடியும். வெளியூரிலிருந்து நல்ல செய்தி வரும். நட்பு வட்டம் விரியும். திடீர் திருப்பம் நிறைந்த நாள்.

**துலாம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எந்த காரியத்தை தொட்டாலும் இரண்டு மூன்று முறை முயன்று முடிக்க வேண்டிய சூழ்நிலை உருவாகும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**விருச்சிகம்**
குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். அரசால் ஆதாயம் உண்டு. அனா வசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். திடீர் பயணங்கள் இருக்கும். முன்னேறும் நாள்.

**தனுசு**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். கல்யாண முயற்சிகள் பலிதமாகும். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். உத்தியோகத்தில் உங்கள் கை ஓங்கும்.

**மகரம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். நெடுநாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடிவருவார். பிரபலங்கள் உதவுவார்கள். வியாபாரத்தை பெருக்குவீர்கள். முயற்சிகள் பலிதமாகும் நாள்.

**கும்பம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வழக்கில் சாதகமான தீர்ப்பு வரும். அநாவசிய செலவுகளை கட்டுப்படுத்துவீர்கள். வெளி வட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மீனம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில சமயங்களில் விரக்தியாக பேசுவீர்கள். குடும்பத்தில் உள்ளவர்களின் உணர்வுகளைப் புரிந்துக்கொள்ளுங்கள். சில வேலைகளை விட்டுக் கொடுத்து முடிப்பீர்கள்.

# வடக்கில் ஆசிரிய வளப்பங்கீடு சரியான முறையில் இல்லை!

## ஜனவரியில் விசேட கலந்துரையாடலுக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், டிசெ.26

வடக்கு மாகாணத்தில் ஆசிரிய வளப் பங்கீடு சரியான முறையில் நடைபெறவில்லை என வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் சுட்டிக்காட்டியுள்ளார். ஆசிரிய தொழிற்சங்கங்கள் மற்றும் கல்வி அமைச்சின் சகல அதிகாரிகளையும் இணைத்து அடுத்த ஆண்டு ஆரம்பத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தி இந்தப் பிரச்னைக்குத் தீர்வு காண எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகளுக்கும், ஆளுநருக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

இதன்போது, வடக்கு மாகாணத்தில் கடந்த காலங்களில் இடம்பெற்ற முறையற்ற இட மாற்றங்கள் மற்றும் முறைகேடுகள் தொடர்பில் ஆசிரியர் சங்கத்தின் பிரதிநிதிகள் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர்.

இடமாற்றங்கள் பெயரளவுக்கே இடம்பெற்றன என்பதைச் சுட்டிக்காட்டிய அவர்கள் ஆசிரிய ஆலோசகர்களுக்கான இட மாற்றங்கள் பல ஆண்டுகளாக நடைமுறைப் படுத்தப்பட வில்லை என்றும் குறிப்பிட் டனர்.

(எ- 05)

# பொதுமன்னிப்பின் கீழ் 8 கைதிகள் விடுதலை!

வவுனியா, டிசெ.26

நத்தார் பண்டிகையை முன்னிட்டு வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் இருந்து 8 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

ஜனாதிபதிக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழ் சிறு குற்றங்களுக்காக தண்டனை பெற்றிருந்த 389 பேர் நாடளாவிய ரீதியில் உள்ள சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்படவுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் அறிவித்திருந்தது.



அந்தவகையில் வவுனியா விளக்கமறியல் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 பேர் நேற்றுக்காலை விடுதலை செய்யப்பட்டனர். (எ)

# ஆளணி இன்மையால் வளங்கள் வீணடிப்பு

## பவானந்தராஜா எம். பி. கவலை

யாழ்ப்பாணம், டிசெ. 26

வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையில் தேவையான கட்டட வசதிகள் உள்ளிட்ட வளங்கள் காணப்படுகின்றன. இருந்தும் பணி நியமனங்கள் வழங்கப்படாததால் அந்த வளங்கள் வீணடிக்கப் படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் சிறீ பவானந்தராஜா தெரிவித்தார்.

இந்தப் பகுதியில் உள்ள மக்களுக்கு குறித்த மருத்துவமனை ஒரு வரப்பிரசாதமாக காணப்படுகிறது. இந்த மருத்துவமனை கண்டிப்பாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய ஒன்று.

சுகாதார அமைச்சு மற்றும் அரசாங்கத்துடன்



கலந்துரையாடி மருத்துவமனையின் அபிவிருத்திக்கு வழி வகுப்பேன்- என்றார்.(எ-05)

## வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் கிளிநொச்சிக்கு மாற்றம்

கிளிநொச்சி, டிசெ. 26

வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் எதிர்வரும் 3 ஆம் திகதியில் இருந்து கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

வடக்கு மாகாண காணி ஆணையாளர் அலுவலகம் தற்போது யாழ்ப்பாணத்தில் இயங்கி வருகின்றது.

இதற்கான புதிய அலுவலகம், கிளிநொச்சி நகரில் பிரதான தபாலகம் அருகில் அமைக்கப்பட்டது.இது எதிர்வரும் 3 ஆம் திகதி திறக்கப்பட்டு அன்று தொடக்கம் கிளிநொச்சியில் அமைக்கப் பட்ட புதிய கட்டடத்தில் இயங்கவுள்ளது.

புதிய கட்டடத்துக்கான அடிக்கல் 4 ஆண்டுகளுக்கு முன்னர் நாட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ)

## விளையாட்டுக் கழகங்களுக்கு உபகரணங்கள் வழங்கப்பட்டன

யாழ்ப்பாணம் டிச25

புங்குடுதீவு பிரதேசத்திலுள்ள அனைத்து விளையாட்டுக் கழகங்களுக்கும் சனநாயக தமிழ் அரசு கூட்டமைப்பின் உறுப்பினர் க. குணாளனின் ஏற்பாட்டில் 10 இலட்சம் ரூபாய் பெறுமதியான உதைபந்தாட்டம், வலைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் மென்பந்து துடுப்பாட்ட உபகரணங்கள் வழங்கப் பட்டன.

இந்த நிகழ்வில் முன்னாள் வேலணை பிரதேச சபை உறுப்பினர் க. நாவலன், சமூகச் செயல்பாட்டாளர்களான பி. சதீஷ், கு. பேபிஷன், ஜெ. லக்சிகா ஆகியோரும் கலந்துகொண்டனர். (எ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை - இந்திய பாலம் கம்மன்பில போர்க்கொடி!

## தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் என்கிறார்



கொழும்பு, டிசெ. 26

**இலங்கையின் தேசிய பாதுகாப்பு மற்றும் சுகாதாரத்துறை உட்பட பல விடயங்களுக்கு அச்சுறுத்தலாக அமையக் கூடிய இலங்கை, இந்திய பாலம் அமைக்கும் யோசனை ஏற்புடையது அல்ல என்று பிவிருது ஹெல உறுமயவின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கை மற்றும் இந்தியாவுக்கிடையில் பாலம் அமைக்கும் யோசனையை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

இந்தியா என்ற நாடு உருவாகும்போது ஏன் இலங்கை இணைக்கப்படவில்லை? இந்தியாவை பிரிட்டன் ஆண்டபோது இந்தியா ஊடாக அல்லாமல் இலங்கையை தனியாக ஆண்டது ஏன்? இலங்கையென்பது தனிநாடாகவே இருந்துவருகின்றது. கடலால் சூழப்பட்டுள்ள எமது நாட்டுக்கென தேச எல்லை உள்ளது. நாம் இந்தியாவின் ஒரு பகுதியாக மாறி இருந்தால் மகா பாரதத்தின் ஒரு பாகமாகவே எமது நாடு இருந்திருக்கும்.தனி நாடுக்குரிய கட்டமைப்பை இயற்கை எமக்கு பரிசாக வழங்கியுள்ளது. எனவே பாலம் அமைத்து இயற்கை வழங்கிய பரிசை நாசமாக்கிவிடக் கூடாது.

எமது நாட்டில் போலியோ ஒழிக்கப்பட்டுள்ளது. மலேரியா இல்லை. ஆனால் தமிழ் நாட்டில் அவ்வாறானதொரு சூழ்நிலை இல்லை. சமூக பிரச்னையும் உள்ளது. எனவே, புதிய பிரச்னைகள் உருவாக இடமளிக்ககூடாது. தேசிய பாதுகாப்பு, சுகாதாரம், சமூக உட்பட பல விடயங்களுக்கு இந்த பாலம் அமைக்கும் யோசனை ஏற்புடையது அல்ல - என்றார். (அ)

# அரச பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு!

கொழும்பு, டிசெ. 26


அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரச நிறுவனங்களின் பணியாளர்களுக்கு 25,000 ரூபாய் அல்லது 20,000 ரூபாவை ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்குமாறு நிதியமைச்சு சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தனவினால் அனைத்து அமைச்சுகளினதும் செயலாளர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நிதியச் சட்ட நிறுவனங்கள் மற்றும் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களின் தலைவர்களுக்கு இந்த சுற்றறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.


அதன்படி, 2023ஆம் ஆண்டில் வரிக்குப் பிந்திய இலாபத்தில் குறைந்தது 30 சதவீதத்தைக் கூட்டு நிதியத்துக்கு அல்லது வரியாகச் செலுத்திய நிறுவனங்களின் பணியாளர்களுக்கு இந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டும் எனச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், ஊக்குவிப்பு கொடுப்பனவுக்காக திறைசேரியினால் நிதி வழங்கப்படமாட்டாது என நிதியமைச்சு குறித்த சுற்றறிக்கையில் சுட்டிக்காட்டியுள்ளது. அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவதில் ஏதேனும் சிக்கல்கள் ஏற்பட்டால், அமைச்சரவையின் விசேட அனுமதியைப் பெறுவது கட்டாயமாகும் எனக் குறித்த சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, கொழும்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த தொழில் அமைச்சர் பேராசிரியர் அனில் ஜயந்த பெர்னாண்டோ, அடுத்த வருடத்துக்கான பாதீட்டில் அரச பணியாளர்களுக்கான வேதன அதிகரிப்பை எதிர்பார்க்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார். (அ)


# யாழ்ப்பாணத்தில் மார்கழிப் பெருவிழா












படங்கள் : ஐ.சிவசாந்தன்

யாழ்ப்பாணம், டிசெ. 26

யாழ்ப்பாணம் தென்னாடு செந்தமிழ் ஆகம சிவ மடம் நடத்திய மார்கழிப் பெருவிழா காலை மாலை அமர்வுகளாக **25.12.2024** புதன் யாழ்ப்பாண கலாசார மத்திய நிலையத்தில் பல நூற்றுக் கணக்கான ஆர்வலர்களின் பங்கேற்புடன் சிறப்பாக நடைபெற்றது.

முன்னதாக காலை 8:30 மணிக்கு வண்ணை வைத்தீஸ்வரன் கோவிலில் இருந்து நடராஜர் திருவுருவம் சேக்கிழார் பெருமான் திருவுருவம் என்பன ஒரு யானையிலும் திருமுறைகளும் சித்தாந்த சாத்திர நூல்களும் இன்னொரு யானையிலும் ஏற்றி யாழ் நகரப் பெரு வீதிகளில் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டு யாழ்ப்பாண கலா சார மத்திய நிலையத்தை அடைந்தது.

பழனி ஆதீன முதல்வர் தவத்திரு சாது சண்முக அடிகளார், யாழ்ப்பாணம் சிவகுரு ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமி, வடமாகாண ஆளுநர் நா. வேதநாயகம், பிரதம செயலாளர் இ. இளங்கோவன், யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறீசற்குணராசா, இந்து நாகரிக துறை தலைவர் பேராசிரியர் ச. முகுந்தன், மறவன்புலவு சச்சிதானந்தம், கலாசாலை அதிபர் ச. லலீசன் உள்ளிட்ட பலர் ஊர்வலத்தில் பங்கேற்றனர். ஊர்வலம் யாழ்ப்பாணம் கலாசார மத்திய நிலையத்தை அடைந்து அங்கு சேக்கிழார் அரங்கில் நிகழ்வுகள் ஆரம்பமாயின.

இலங்கையில் மாவட்ட ரீதியாக நல்லாசிரியராக தெரிவு செய்யப்பட்ட அறநெறி பாடசாலை ஆசிரியர் களுக்கு மெய் கண்டார் விருது வழங்கப் பட்டது.

நிகழ்வின் நிறைவில் தென்னாடு அமைப்பின் நிறு வுநர் பொறியியலாளர் குணரத்தினம் பார்த்திபன் நிறைவுரை ஆற்றினார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி தேர்தல் ஏற்பாடுகள் ஆரம்பம்!

## பிரதி அமைச்சர் ருவன் செனரத்

கொழும்பு, டிசெ. 26

**உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கு புதிதாக வேட்பு மனுக்களைக் கோருவதற்கான சட்ட மூலத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. திங்களன்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொது நிர்வாக, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சிமன்ற பிரதி அமைச்சர் ருவன் செனரத் தெரிவித்துள்ளார்.**

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான புதிய வேட்பு மனுக்களை கோருவதற்கு அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்துக்கமைய குறித்த சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இதற்கு சட்டமா அதிபரின் அங்கீகாரமும் கிடைக்கப் பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சட்ட மூலம் அடுத்த மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்கனவே கோரப்பட்ட வேட்புமனுவை மீளப் பெறுவதற்கான தீர்மானத்துக்கு கடந்த 3ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியது. ஆனால் தேர்தல் முறைமையில் எவ்வித மாற்றங்களும் ஏற்படுத்தப்பட மாட்டாது என்றும் அரசாங்கம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவு திருத்தம்

கொழும்பு, டிசெ. 26

ஜனவரி மாதம் முதல் அமுலாகும் வகையில், அஸ்வெசும திட்டத்தின் கீழ் நலன்புரி கொடுப்பனவுகளைச் செலுத்தும் முறைமை தொடர்பான புதிய வர்த்தமானி அறிவித்தல், நிதியமைச்சராக, ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்கவினால் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் கடந்த மே மாதம் 17ஆம் திகதி வெளியிடப்பட்ட அஸ்வெசும தொடர்பான அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் இரத்து செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, வறிய குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த 8,500 ரூபா கொடுப்பனவு, 10,000 ரூபாவாகவும், மிகவும் வறிய குடும்பம் ஒன்றுக்கு வழங்கப்பட்டு வந்த 15,000 ரூபா கொடுப்பனவு 17 ஆயிரத்து 500 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும், ஜனவரி முதல் 2026 ஆம் ஆண்டு ஜூன் மாதம் வரையில் குறித்த பிரிவினருக்கு இந்த கொடுப்பனவுகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏனைய 2 சமூக பிரிவினருக்கான கொடுப்பனவுகளில் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# குருநாகல் பகுதியில் துப்பாக்கிச் சூ; 32 வயதான நபர் பலி! மனைவி காயம்!!

கொழும்பு, டிசெ. 26

குருநாகல் - வெல்லவ பகுதியில் நேற்றிரவு நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் நபரொருவர் உயிரிழந்ததுடன், அவரது மனைவி காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு இந்த துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ள நிலையில், அவ்வீட்டிலிருந்த தம்பதியினர் காயமடைந்துள்ளனர். அவர்கள் சிகிச்சைக்காக குருநாகல் போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் 32 வயதான கணவர் உயிரிழந்துள்ளார்.

காயமடைந்த மனைவி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (அ)

# பணிநீக்கப்பட்ட மின்சார சபை ஊழியர்கள் மீண்டும் கடமையில்

கொழும்பு, டிசெ. 26

கடந்த அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் பணிநீக்கம் செய்யப்பட்ட இலங்கை மின்சார சபையின் 62 பணியாளர்களும் மீண்டும் கடமையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

வலுசக்தி அமைச்சர் குமார ஜயக்கொடியின் விசேட பணிப்புரைக்கமைய அவர்கள் மீண்டும் கடமையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

கடந்த ஜனவரி மாதம், இலங்கை மின்சார சபையைத் தனியார் மயமாக்குவதற்கு எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து அதன் தொழிற் சங்கங்கள் போராட்டங்களை முன்னெடுத்திருந்தன.

அதன்போது, மின்சார விநியோகம் அத்தியாவசிய சேவையாக அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் நுகர்வோருக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் வகையில் போராட்டத்தில் ஈடுபட்டமைக்காக, குறித்த 62 பேரும் அப்போதைய மின்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகரவின் பணிப்புரைக்கமைய இடைநிறுத்தப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக இந்த நத்தார் பண்டிகை அமையட்டும்

## பிரதமர் ஹரிணி நத்தார் வாழ்த்து

கொழும்பு, டிசெ. 26

நத்தார் பண்டிகை தவறுகளை மன்னிக்கவும் சமரசம் செய்யவும் நினைவூட்டுகிறது. ஆகவே, எமது குடும்பங்கள், சமூகங்கள் மற்றும் பரந்த உலகுக்குள் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதாக இந்த நத்தார் தினம் அமையட்டும் என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தனது கிறிஸ்மஸ் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்துச் செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்-இந்த மகிழ்ச்சியான பருவத்தைக் கொண்டாடும் இந்தத் தருணத்தில், கிறிஸ்மஸ் ஒற்றுமை, நன்றியுணர்வு மற்றும் அமைதி ஆகியவற்றின் உண்மையான சாராம்சத்தைப் பற்றி சிந்திக்க சிறிது நேரம் ஒதுக்குவோம்.

எமது தேசத்துக்கான மாற்றம் மற்றும் மீளமைப்பதற்கான இந்த நேரத்தில், குடும்பம் மற்றும் நண்பர்களுடன் பெறுமதிமிக்க நேரத்தை செலவிடுவதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. ஒன்று கூடுவதும் உணவைப் பகிர்ந்து கொள்வதும் ஒருவரையொருவர் ஆதரிப்பதும் எமது பந்தங்களை மட்டுமல்ல, நம் நெகிழ்ச்சியையும் பலப்படுத்துகின்றது. ஆரோக்கியமான சமூகத்தையும் வலிமையான நாட்டையும் கட்டியெழுப்புவது வீட்டிலிருந்து தொடங்குகிறது என்பதை இந்தத் தருணங்கள் நமக்கு நினைவூட்டுகின்றன.

இந்தப் பண்டிகைக் காலத்தில் தங்கள் அன்புக்குரியவர்களுடன் இருக்க முடியாதவர்களையும் நாங்கள் அங்கீகரிக்கின்றோம். நம் நாட்டுக்குள்ளும் வெளிநாட்டிலும் வீட்டிலிருந்து வெகு தொலைவில் பணிபுரிபவர்களுக்கும் அவர்களின் குடும்பங்களை ஆதரிப்பதற்காகவும் எங்கள் சமூகத்தை நிலைநிறுத்தும் அத்தியாவசிய சேவை ஊழியர்களுக்கும் நன்றி.

தொடர்புகளை வளர்த்துக் கொள்ளவும் பின்னடைவை உருவாக்கவும் ஒற்றுமை மற்றும் புரிதலுக்கு உறுதியளிக்கவும் இந்தப் பண்டிகை நம்மை ஊக்குவிக்கட்டும். உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான கிறிஸ்மஸ் வாழ்த்துக்கள்-என்று குறிப்பிட்டுள்ளார். (அ)

# மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 பேர் கைது!

கொழும்பு, டிசெ. 26

இலங்கை பொலிஸாரால் அமுல்படுத்தப்பட்டுள்ள விசேட போக்குவரத்து கண்காணிப்பின் கீழ் கடந்த 24 மணித்தியாலங்களில் மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட போக்குவரத்து நடவடிக்கையின் கீழ் மதுபோதையில் வாகனம் செலுத்தியவர்கள் உட்பட மொத்தம் 8,747 சாரதிகளுக்கு எதிராக சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பண்டிகைக் காலங்களில் வாகன விபத்துக்களை குறைக்கும் நோக்கில் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் பணிப்புரையின் பேரில் கடந்த 23 ஆம் திகதி முதல் இந்த விசேட போக்குவரத்து நடவடிக்கை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த 24 மணித்தியாலங்களில் நாட்டில் வீதி விபத்துக்களால் உயிரிழப்பு எதுவும் ஏற்படவில்லை என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில நாட்களாக இடம்பெற்று வரும் பயணிகள் போக்குவரத்து பஸ்கள், ஏனைய வாகனங்கள் உள்ளிட்ட விபத்துக்களை கருத்திற் கொண்டு விபத்துக்களை குறைக்கும் நோக்கில் இந்த போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (அ)

# சுற்றுலாத்துறையில் இலங்கை மைல்கல்!

கொழும்பு, டிசெ. 26

2024 ஆம் ஆண்டிற்கான தனது இரண்டு மில்லியன் சுற்றுலாப் பயணிகளை இன்று வரவேற்கத் தயாராகும் நிலையில், இலங்கை தனது சுற்றுலாத் துறையில் குறிப்பிடத்தக்க மைல்கல்லை எட்டவுள்ளது.

இந்த முக்கிய நிகழ்வு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இன்று நடைபெறவுள்ளது.

இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம், சுற்றுலாத்துறையை புத்துயிர் பெறுவதற்கும் மேம்படுத்துவதற்கும் நாட்டின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டும் வகையில், இந்த சாதனையைக் குறிக்கும் வகையில் ஒரு சிறப்பு விழாவிற்கான திட்டங்களை அறிவித்துள்ளது.

2024 ஜனவரி 01 ஆம் திகதி முதல் டிசெம்பர் 15 ஆம் திகதி வரையான காலப் பகுதியில் மொத்தம் 1,901,988 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.

# நத்தார் தின அர்த்தத்தை புரிந்து ஒரு நாடாக முன்னேறவேண்டும்

கொழும்பு, டிசெ. 26

நமது நாடு எதிர்கொள்ளும் வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டுமெனில் இனம், மதம், வர்க்கம், கட்சி பேதமின்றி அனைத்து மக்களும் சகோதரத்துவத்துடன், நல்லிணக்கத்துடன், அன்புடன் செயல்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்-அன்பு, அமைதி மற்றும் சகோதரத்துவத்தை மையப்படுத்திய நத்தார் பண்டிகை கிறிஸ்தவர்களின் மத விழா மட்டுமல்ல, உலகெங்கிலும் வாழும் அனைத்து இனம், மதம், கட்சி, நிறம், இளையோர், முதியோர் என பாகுபாடின்றி கொண்டாடப்படும் கலாசார விழாவாகவும் உள்ளது.

நத்தார் தினத்தின் உண்மையான அர்த்தத்தை சரியாக புரிந்துகொண்டு நாமும் ஒரு நாடாக முன்னேற வேண்டிய நேரம் வந்துள்ளது.

இந்த தருணத்தில் நமது நாடு எதிர்கொள்ளும் வங்குரோத்து நிலையிலிருந்து மீள வேண்டு மெனில் நாமும் இனம், மதம், வர்க்கம், கட்சி பேதமின்றி அனைத்து மக்களும் சகோத ரத்துவத்துடன், நல்லிணக்கத் துடன், அன்புடன் செயல்பட வேண்டும்-என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவரை விளம்பரங்களுக்கு பயன்படுத்துவதற்குத் தடை!

## அறிவித்தல் வெளியிட அரசாங்கம் முடிவு

கொழும்பு, டிசெ. 26

**எதிர்வரும் ஜனவரி முதலாம் திகதி முதல் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களை விளம்பரங்களுக்குப் பயன்படுத்தத் தடை விதிக்கும் வர்த்தமானி அறிவித்தல் இன்னும் சில நாட்களில் வெளியிடப்படும் என்று அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.**

இந்த வர்த்தமானி அறிவித்தல் குற்றவியல் சட்டம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை சட்டத்தின் கீழ் வெளியிடப்படவுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வர்த்தக விளம்பரங்களில் சிறுவர்களை அவசியமற்ற வகையில் பயன்படுத்துவதைத் தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

கடந்த அரசாங்கங்கள் இது தொடர்பில் பல தடவைகள் வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிட்ட போதும் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை எனப் பல தரப்பினர் தெரிவித்து வருகின்றனர். (அ)

# கோழி இறைச்சியை கையூட்டாக பெற்றுக் கொண்ட இருவர் கைது!

கொழும்பு, டிசெ. 26

1,170 ரூபாய் பெறுமதியான கோழி இறைச்சி கிலோவொன்றை கையூட்டலாக பெற்றுக் கொண்ட 2 பேர் கையூட்டலுக்கு எதிரான ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வேவல்தெனிய உப அலுவலகத்தில் சேவையாற்றும் பதில் இறைவரி அதிகாரி ஒருவரும் வீதி பிரிவில் பணிபுரியும் தொழிலாளி ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொஸ்கம பிரதேசத்திலுள்ள வர்த்தகர் ஒருவர் மேற்கொண்ட முறைப்பாட்டுக்கமைய குறித்த இருவரும் கைதாகினர்.

வர்த்தக நிலையம் ஒன்றின் 2025 ஆம் ஆண்டுக்கான வர்த்தக அனுமதிப்பத்திரத்தை வழங்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக இந்த கோழி இறைச்சி கையூட்டலாக கோரப்பட்டுள்ளதாக அந்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முறைப்பாட்டாளரின் வர்த்தக நிலையத்திற்கு அருகில் வைத்து கைதான குறித்த இருவரும் அத்தனகல்ல நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர். (அ)

# அமைச்சர் சுனில் ஹந்துநெத்தியின் பெயரைப் பயன்படுத்தி பணமோசடி!

கொழும்பு, டிசெ. 26

வெளிநாட்டில் வாழும் இலங்கையரை வாட்ஸ்அப் குழு மூலம் ஏமாற்றி பணம் வசூலிக்கும் மோசடி சம்பவம் தொடர்பில் சி.ஐ.டியில் முறைப்பாடு ஒன்று பதிவாகியுள்ளது.

கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி போன்று, நபரொருவர் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டு, வெளிநாட்டில் வாழும் இலங்கையரை வாட்ஸ் அப் குரூப் மூலம் ஏமாற்றி பணம் வசூலிக்கும் மோசடியில் ஈடுபட்டுள்ளமை தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

அமைச்சர் சுனில் ஹந்துநெத்தி குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் நேற்று முன்தினம் செய்த முறைப்பாட்டுக்கமைய இந்த விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. ஆள்மாறாட்டம் செய்து மோசடி செய்பவர்கள் பயன்படுத்திய தொலைபேசி இலக்கம் மற்றும் பணம் எடுப்பதற்கு பயன்படுத்தப்படும் வங்கிக் கணக்கு இலக்கம் என்பனவற்றை அமைச்சர் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் முறைப்பாட்டில் வழங்கியுள்ளார்.

எதிர்வரும் ஜனவரி 05ஆம் திகதி இணையவழி ஊடாக வெளிநாட்டில் வாழும் இலங்கையைச் சேர்ந்த கட்சி உறுப்பினர்களுடன் சந்திப்பு நடத்தவுள்ளதாக சுனில் ஹந்துநெத்தியின் கையொப்பமிடப்பட்ட போலி விளம்பரம் வட்ஸ்அப் ஊடாக விநியோகிக்கப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுளளது.

இந்த மோசடி செயலுக்கு தனது பெயர், கட்சியின் பெயர் மற்றும் தனது புகைப்படம் பயன்படுத்தப்பட்டுள்ளதாக அமைச்சர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நடவடிக்கை, தனது நற்பெயருக்கு மட்டுமல்லாமல், வெளிநாடுகளில் வாழும் அப்பாவி இலங்கையர்களின் நிதி நிலைமைக்கு மற்றும் மனநிலையில் கடுமையான பாதிப்புகளை ஏற்படுத்தும் என்று அமைச்சர் சுனில் ஹந்துன்நெத்தி தனது முறைப்பாட்டில் வலியுறுத்தினார்.

அவர் மேலும் கூறுகையில், மக்கள் தனது மீது அளவற்ற நம்பிக்கையை வைத்திருக்கின்றனர். ஆனால், இவ்வாறான மோசடி நடவடிக்கைகள் அந்த நம்பிக்கையை மட்டுமல்லாமல், தனது அரசியல் வாழ்க்கைக்கும் துயரத்தை ஏற்படுத்தும் வகையில் செயல்படுகின்றன.

அவரின் பெயரை தவறாக பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடிகள், பொதுமக்களின் நற்பெயரையும், சமூகத்தில் உருவாகியுள்ள தனது நேர்மையான அரசியலின் மதிப்பையும் கேள்விக்குள்ளாக்குவதாக அவர் தனது முறைப்பாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதை தடுக்க மற்றும் குற்றவாளிகளை உடனடியாக நடவடிக்கை எடுத்து நீதிக்கு கொண்டு வர வேண்டும் என்று அவர் வலியுறுத்தியுள்ளார். (அ)

# பண்டிகைக் காலங்களில் வீதி சட்டங்களை மக்கள் முறையாக கடைப்பிடிக்கவேண்டும்

கொழும்பு, டிசெ. 26

பண்டிகைக் காலங்களில் வீதி விபத்துக்களை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இலங்கை தேசிய வைத்தியசாலையின் விபத்து பிரிவின் பணிப்பாளர் வைத்தியர் இந்திக்க ஜாகொட தெரிவித்துள்ளார்.

அதிக வேகம் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளை பின்பற்றமை போன்ற காரணங்களால் வீதி விபத்துகள் அதிகரித்து வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வீதி விபத்துக்கள் தடுக்கப்படக்கூடிய ஒன்றாகும் எனவும், மக்கள் இது தொடர்பில் பாதுகாப்பான நடைமுறைகளை பின்பற்றுமாறும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

குறிப்பாக, மோட்டார் சைக்கிள் ஓட்டுபவர்களுக்கு தலைக்கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட வேண்டும். வாகனங்களில் பயணிக்கும் போது முன் இருக்கைகளில் அமர்ந்திருப்பவர்கள் மாத்திரமே சீட் பெல்ட் அணிவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், விபத்து ஏற்படும் போது, சீட் பெல்ட் அணியாத பின் இருக்கையில் பயணிப்பவர்களுக்கு விபத்துகளின் தீவிரம் மிக அதிகம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதே வேளை, இதுவரை மதுபோதையில் வாகனம் செலுத்திய 251 சாரதிகள் உட்பட, வீதி சட்டங்களை மீறிய குற்றச்சாட்டில் 8,747 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (அ)

# நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்ட பாதாள தலைவர்கள் கடல் வழியாக தப்பினரா?

கொழும்பு, டிசெ. 26

நாட்டின் முன்னணி போதைப்பொருள் வியாபாரிகளில் ஒருவராகக் கூறப்படும் 'குடு சலிந்து' மற்றும் அண்மையில் நீதிமன்றத்தினால் பிணையில் விடுவிக்கப்பட்ட பாதாள உலகக் கும்பலின் தலைவன் 'பொடி லஸ்ஸி' ஆகியோர் இரகசியமாக நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பாதுகாப்பு தரப்பினர் சந்தேகிக்கின்றனர். நாடு. இந்த இரண்டு குற்றவாளிகளும் கடல் வழியாக வெளிநாட்டுக்கு தப்பிச் சென்றிருக்கலாம் என்ற பெரும் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் பாதுகாப்பு தரப்பினர் கூறுகின்றனர்.

பாணந்துறை மேல் நீதிமன்றம் குடு சலிந்துவுக்கு பிணை வழங்கியதுடன், ஒவ்வொரு மாதமும் முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 9 தொடக்கம் 12 மணிக்குள் குற்றப் புலனாய்வு திணைக்களத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டுள்ளது.

குடு சாலிந்து கடந்த ஞாயிற்றுக்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் முன்னிலை யாகவிருந்த போதிலும், அவர் அன்றைய தினம் ஆஜராகவில்லை என பொலிஸ் தலைமையக தகவல்கள் தெரிவிக்கின்றன.

குடு சலிந்து பிணையில் விடுவிக்கப்பட்டதையடுத்து, அன்றிரவு (அதாவது 20ஆம் திகதி இரவு) பாணந்துறையில் உள்ள அவரது வீட்டில் பெரும் விருந்து நடைபெற்றதாக தகவல் கிடைத்துள்ளது.

அந்த விருந்துக்காக போதைப்பொருள் வியாபாரிகள், பாதாள உலக குண்டர்கள் உட்பட பெருமளவிலானோர் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விருந்து நடைபெற்றபோது சலிந்து ஏற்கனவே நாட்டை விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தென்னிலங்கை பாதாள உலகின் மிக மோசமான குற்றவாளிகளில் ஒருவராகக் கூறப்படும் பொடி லெசி கடந்த 9ஆம் திகதி பிணையில் விடுதலை செய்யப்பட்டார்.

பிணையில் விடுவிக்கப்பட்ட பொடி லெசி, சொகுசு கார்களில் ஊர்வலமாக கொழும்பு பகுதிக்குச் சென்றுள்ளார். அதன்பிறகு பொடி லெசி குறித்து எந்த தகவலும் வரவில்லை என பாதுகாப்பு படையினர் கூறுகின்றனர்.

ரத்கம உள்ளூராட்சி மன்றத் தலைவர் மனோஜ் மெண்டிஸ் சுட்டுக் கொல்லப்பட்டமை உட்பட தெற்கில் இடம்பெற்ற பல கொலைகளுக்காக பொடி லெசி மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

நாட்டின் முன்னணி போதைப்பொருள் கடத்தல்காரர்களான ஹரக் கட்டா மற்றும் குடு சலிந்து ஆகியோர் மார்ச் 15, 2023 அன்று மடகாஸ்கரில் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

பின்னர், இந்த இரண்டு போதைப்பொருள் கடத்தல்காரர்களும் பொலிஸ் விசேட அதிரடிப்படை மற்றும் குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டனர். போதைப் பொருள் வியாபா ரியான ஹரக் கட்டா தற்போது தங்காலை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

நாட்டில் கடுமையான குற்றவாளியாக இருந்த கஞ்சிபானி இம்ரான், முன்னதாக நீதிமன்றத்தில் பிணை பெற்று கடல் மார்க்கமாக நாட்டை விட்டு தப்பிச் சென்றது குறிப்பிடத்தக்கது.

# நுகர்வோர் ஒருவரை தாக்கிய உணவக முகாமையாளர் உள்ளிட்ட மூவர் கைது!

கொழும்பு, டிசெ. 26

நுகர்வோர் ஒருவரைத் தாக்கி காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் கெக்கிராவை நகரிலுள்ள உணவகம் ஒன்றின் முகாமையாளர் உள்ளிட்ட 3 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உணவக்திற்கு பிரவேசித்த நுகர்வோர் மற்றும் உணவகத்தின் முகாமையாளர் ஆகியோருக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் தீவிரமடைந்த நிலையிலேயே இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்த கெக்கிராவை □ திப்பட்டுவெவ பிரதேசத்தைச் சேர்ந்த 33 வயதானவர் தம்புள்ளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைதான உணவகத்தின் உரிமையாளர் உள்ளிட்ட 3 பேர் உக்குவலை, மாத்தளை, மடாடுகம ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ)

# இந்த ஆண்டு இதுவரை 101 துப்பாக்கிச் சூடுகள்

கொழும்பு, டிசெ. 26

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 101 துப்பாக்கிச் சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை குறித்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பங்களினால் 60 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 44 பேர் காயமடைந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்நிலையில் நாட்டில் மீண்டும் தலைதூக்கியுள்ள பாதாள உலகக் குழுக்களின் செயற்பாடுகளை ஒடுக்குவதற்கு தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனர்த்தம் நிகழ்ந்து இன்று இருபது வருடங்கள்

# சுனாமி வீடமைப்புத் திட்டம் இதுவரை வழங்கப்படவில்லை

**அக்கரைப்பற்று, டிசெ.26**


**சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து இன்று இருபது வருடங்களாகியும் இவ் அனர்த்தத்தின் மூலம் வெகுவாகப் பாதிக்கப்பட்ட அக்கரைப்பற்று பிரதேச மக்களுக்காக சவுதி அரேபிய அரசாங்கத்தின் அறக்கட்டளை நிதி மூலம் நிர்மாணிக்கப்பட்ட 500 வீடுகள் கொண்ட நுரைச்சோலை சுனாமி வீடமைப்புத் திட்டம் இதுவரை தமக்கு வழங்கப்படவில்லை என பாதிக்கப்பட்ட மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**



அக்கரைப்பற்று பிரதேசத்தில் சுனாமி அனர்த்தத்தின் போது முற்றாகப் பாதிக்கப்பட்ட 500 குடும்பங்களுக்காகவும், அந்தக் குடும்பத்தவர்களில் தங்கி வாழும் 1232 பேரின் நன்மை கருதியும் நிர்மாணிக்கப்பட்ட நுரைச்சோலை வீடமைப்புத் திட்டத்தை பல அரசாங்கங்கள் ஆட்சியில் இருந்து வந்த வேளை தம்மை ஏமாற்றி வந்ததாகவும், தற்போது மக்கள் நல சேவைகளை முன்னெடுத்து வரும் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க தலைமையிலான அரசாங்கம் இந்த வீட்டுத் திட்டத்தை தமக்கு வழங்கும் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

கடந்த 2006 ஆம் ஆண்டு மே மாதம் இரண்டாம் திகதி இவ்வீடமைப்புத் திட்ட நிர்மாணத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. இதன்பிரகாரம் சுமார் 1000 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நிதியைக் கொண்டு நவீன முறையில் 500 வீடுகள் இப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப் பட்டன. சில காரணங்களின் அடிப்படையில் இவ்வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு 18 ஆண்டுகளாகியும் வீடுகள் உரியவர்களுக்கு வழங்கப்படாமலிருப்பது மிகுந்து வேதனையளிக்கின்றது என பாதிக்கப்பட்ட மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். (எ)

## எலிக்காய்ச்சல் நோய் தொடர்பில் கல்முனையில் மீளாய்வுக்கூட்டம்



கல்முனை, டிசெ.26

எலிக்காய்ச்சல் மற்றும் டெங்கு நோய் தொடர்பான மீளாய்வுக் கூட்டமொன்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் நடைபெற்றது.

பிராந்திய தொற்று நோய் தடுப்புப் பிரிவால் ஒருங்கிணைப்பு செய்யப்பட்டு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி சகீலா இஸ்ஸதீன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் பிராந்திய தொற்று நோய் தடுப்புப் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி எம். ஏ. சீ. எம். பஸால், சுகாதார வைத்திய அதிகாரிகள், மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் கலந்து கொண்டனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பூச்சியல் ஆய்வுக் குழுவின் பொறுப்பாளர் சுகாதார பூச்சியியல் உத்தியோகத்தர் கே.ஏ.ஹமீட் தயாரித்த வருடாந்த பூச்சியியல் ஆய்வறிக்கை இந்த மீளாய்வு கூட்டத்தின் போது வெளியிடப்பட்டது.

இதன் பிரதிகளை பிராந்திய பணிப்பாளர், தொற்று நோய் தடுப்புப் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி ஆகியோருக்கு பூச்சியல் உத்தியோகத்தர் ஹமீட் வழங்கி வைத்தார். (எ)

## கலை நிகழ்வும் பரிசளிப்பு விழாவும்



கல்முனை, டிசெ. 26

கல்முனை நற்பிட்டிமுனை அல் அக்ஸா பாலர் பாடசாலையின் 19ஆவது ஆண்டு நிறைவு விழா பாடசாலையில் நடைபெற்றது.

கலை நிகழ்வும், பரிசளிப்பு விழாவும் எனும் தொனிப்பொருளில் பாடசாலையின் அதிபர் இஸ்மாயீல் றியாஸா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாண சட்டப்பணிப்பாளர் சீ. எம். கலீம் பிரதம விருந்தினராக கலந்து கொண்டனர்.

பாடசாலையின் மாணவ, மாணவிகளால் பல்வேறுபட்ட கலைநிகழ்வுகளும், போட்டி நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (எ)

# ரோஹிங்கியா அகதிகளை மீண்டும் முல்லைத்தீவுக்கு அனுப்பியது ஏன்?

**பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர விளக்கம்**

கல்முனை, டிசெ.26

மியன்மார் நாட்டைச் சேர்ந்த ரோஹிங்கியா அகதிகளுக்கு போதுமான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கும், அவர்களுக்கு தேவையான பாதுகாப்பை அளிப்பதற்குமே முல்லைத்தீவு கேப்பாபிலவு விமானப்படைத் தளத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்புகள் பிரதி அமைச்சர் அருண் ஹேமச்சந்திர தெரிவித்தார்.

கல்முனையில் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அகதிகள் என்ற மனிதாபிமானத்தோடு மட்டுமே இவர்களை கையாண்டு கொண்டிருக்கிறோம். இங்கு வேறு எதனையும் நாங்கள் எடுத்துக் கொள்ளவில்லை. எனவே இது தொடர்பில் யாரும் குழப்பமடையவோ, கவலை அடையவோ தேவையில்லை.

தேசிய மற்றும் சர்வதேச ரீதியான சட்ட திட்டங்களுக்கு ஏற்ப ஒருங்கிணைப்புடன் இவர்களை நாங்கள் கையாண்டு கொண்டிருக்கின்றோம்.

அகதிகள் எவரும் உடல் ரீதியாகவோ உள ரீதியாகவோ துன்புறுத்தல்களுக்கோ ஆளாக்கக்கூடாது என்பதில் மிகக் கவனமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறோம்- என்றார். (எ)

# கல்முனை ஆதார மருத்துவமனை பாதுகாப்பு குறித்து அறிவுறுத்தல்

கல்முனை, டிசெ.26

கல்முனை ஆதார மருத்துவமனையின் பாதுகாப்பு மற்றும் நோயாளிகள், பார்வையிடவரும் பொதுமக்கள் தொடர்பான பாதுகாப்பு அறிவுறுத்தல் கூட்டம் மருத்துவமனை பணிப்பாளர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் நடைபெற்றது.

இந்தச் செயல்பாடு தொடர்பில் மருத்துவர் சுகுணன் விளக்கமளிக்கையில், நோயாளிகள், பார்வையாளர்கள், உத்தியோகத்தர்களின் பாதுகாப்பும் மருத்துவமனையின் பௌதீக வளங்களின் பாதுகாப்பும் ஒரு சிறப்பான மருத்துவ சேவையை உறுதிப்படுத்த இன்றியமையாதது.

அந்தவகையில் கல்முனை ஆதார மருத்துவமனையின் பாதுகாப்பு தொடர்பில் மருத்துவமனை பாதுகாப்பு பிரிவினர் அக்கறையுடன் செயல்பட வேண்டும்- என்றார்.



அவர்களின் செயல்பாடு சம்பந்தமான புதியதொரு செயன்முறையும் அறிமுகப்படுத்தப்பட்டது.

கலந்துரையாடலின்போது கடந்த காலங்களில் ஏற்பட்ட குறைபாடுகள் சம்பந்தமாகவும் அப்படியொரு நிலைமையில் எவ்வாறு அவற்றைக் கையாள வேண்டுமென்றும் தெளிவு படுத்தப்பட்டது. (எ)

## சுனாமி நினைவு தினமும் இரத்ததானம் வழங்கலும்

மாளிகைக்காடு, டிசெ.26

மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் ஏற்பாட்டில் 2004 ஆம் ஆண்டு இதேநாளில் இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தின் இருபதாவது நினைவு தினத்தை முன்னிட்டு ஏற்பாடு செய்துள்ள சுனாமி நினைவு தின நிகழ்வும் இரத்ததானம் வழங்கலும் இன்று வியாழக்கிழமை மாளிகைக்காடு மத்தி தோணா வீதியில் அமைந்துள்ள ஜனாஸா நலன்புரி அமைப்பின் கட்டடத்தில் நடைபெறவுள்ளது. (எ)

## அம்பாறை மாவட்டத்தில் உள்ள தேவாலயங்களுக்கு பாதுகாப்பு

கல்முனை, டிசெ.26

கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் பொலிஸ் மற்றும் முப்படையினரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

குறிப்பாக கல்முனை, பெரியநீலாவணை, சவளக்கடை, சம்மாந்துறை, காரைதீவு, திருக்கோவில், அக்கரைப்பற்று, பொத்துவில் பொலிஸ் பிரிவில் உள்ள தேவாலயங்களுக்கு இவ்வாறு பாதுகாப்புகள் வழங்கப்பட்டிருந்தன. இப்பகுதியில் உள்ள கிறிஸ்தவ தேவாலயங்களுக்கான பாதுகாப்பு தொடர்பில் தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அனைத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் அம்பாறை மாவட்ட பொலிஸ்மா அதிபர் பணிப்புரை விடுத்திருந்தார்.

இதனையடுத்தே நேற்று கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன. (எ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிமருந்து தொழிற்சாலை திடீரென வெடித்து சிதறியது

## 13 பேர் உயிரிழந்தனர், மூவர் காயம்

அங்காரா, டிசெ. 26

**துருக்கியில் வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட பயங்கர வெடிவிபத்தில் சிக்கி 13 பேர் உயிரிழந்தனர்.**



துருக்கி நாட்டின் பிலிகிசர் மாகாணம் கரிசி நகரில் இராணுவ ஆயுதங்களுக்குத் தேவையான வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. இந்தத் தொழிற்சாலையில் 50இற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றனர்.

இந்த நிலையில், இந்த வெடிமருந்து தொழிற்சாலையில் நேற்று பயங்கர வெடிவிபத்து ஏற்பட்டது. இந்த வெடிவிபத்தில் சிக்கி 13 பேர் உயிரிழந்தனர். மேலும், 3 பேர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். (எ)

# விண்வெளி மையத்தில் கிறிஸ்மஸ் கொண்டாட்டம்

வாஷிங்டன், டிசெ.26

சர்வதேச விண்வெளி மையத்தில் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது குழுவினர் கிறிஸ்மஸ் கொண்டாடிய வீடியோவை நாசா வெளியிட்டுள்ளது.



சர்வதேச விண்வெளி நிலையத்தில் 6 மாதங்களுக்கு மேல் தங்கியுள்ள இந்திய வம்சாவளியைச் சேர்ந்த சுனிதா வில்லியம்ஸ் மற்றும் அவரது குழுவினர் பூமியில் இருக்கும் மக்களுக்கு கிறிஸ்மஸ் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள வீடியோ வில், பூமியில் உள்ள அனைவருக்கும், சர்வதேச விண்வெளி வீரர்களான எங்களின் கிறிஸ் மஸ் வாழ்த்துகள். சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு வரவேற்கிறோம்.

கிறிஸ்மஸ் விடு முறைக்கு நாங்கள் தயாராகிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் 7 பேர் இங்கே இருக்கிறோம். நாங்கள் ஒன்றாக இணைந்து கிறிஸ்மஸ் கொண்டாடவுள்ளோம் என அந்த வீடியோவில் கூறப்பட்டுள்ளது. (எ)

# ரஷ்யாவில் அரிசி ஏற்றுமதிக்கு மேலும் 6 மாதம் தடை நீடிப்பு

மொஸ்கோ, டிசெ. 26

ரஷ்யாவில் அரிசி ஏற்றுமதிக்கான தடை மேலும் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு ரஷ்யாவில் உள்ள பெடோரோவ்ஸ்கி நீர்மின் நிலையத்தில் ஏற்பட்ட விபத்து மற்றும் ரஷ்யாவின் முதன்மை அரிசி உற்பத்தி செய்யும் பகுதியான கிராஸ்னோடர் பகுதியில் உள்ள நெல் வயல்களில் ஏற்பட்ட பெருவெள்ளம் ஆகிய வற்றின் காரணமாக, அரிசி ஏற்றுமதிக்கு தற்காலிக தடை விதித்து அந்த நாட்டு அரசு உத்தரவிட்டது.

உள்நாட்டு சந்தைக்கு நிலையான விநியோகத்தை உறுதி செய்வதற்காக டிசெம்பர் 31, 2024 வரை அரிசி ஏற்றுமதிக்கான தடை நீடிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில், நெல் விதைகளைத் தவிர, அரிசி மற்றும் அரிசிப் பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான தடையை மேலும் 6 மாதங்களுக்கு அதாவது 2025 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை நீடித்து ரஷ்ய அரசு உத்தரவிட்டுள்ளது. (எ)

# ஆப்கானிஸ்தானில் நள்ளிரவில் தொடர் வான்வழித் தாக்குதல்!

## குழந்தைகள் உட்பட 15 பேர் பலி, பலர் படுகாயம்

காபூல், டிசெ. 26

பாகிஸ்தானில் இருந்து வான்வழியே ஆப்கானிஸ்தான் மீது ஜெட் விமானங்கள் குண்டு மழை பொழிந்ததில் 15 பேர் பலியாகினர். பலர் படுகாயமடைந்தனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டின் பக்திகா மாகாணத்தில் பர்மால் மாவட்டத்தில் நள்ளிரவு பாகிஸ்தானில் இருந்து தொடர்ச்சியாக வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதில், பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட 15 பேர் பலியாகினர்.

இதேவேளை, பலி எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் தாக்குதலில் 7 கிராமங்கள் பாதிக்கப்பட்டுள்ளன.

இதில், ஒரே குடும்பத்தின் 5 உறுப்பினர்கள் உயிரிழந்தனர். பாகிஸ்தானில் இருந்து ஜெட் விமானங்கள் குண்டு மழை பொழிந்தன என ஊட கங்கள் செய்தி வெளியிட் டுள்ளன.

இந்தத் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்று தலிபான்களின் பாதுகாப்பு அமைச்சு சூளுரைத்துள்ளது.

நிலம் மற்றும் இறையாண்மையை பாதுகாப்பது என்பது தங்களுடைய சட்ட உரிமை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

ஜப்பானில் சிரிப்புத் திருவிழா

# உரக்க சிரித்து ஆண்டின் கவலைகளை மறந்த மக்கள்

ரோக்கியோ, டிசெ. 26

ஜப்பானில் சிரிப்புத் திருவிழா நடைபெற்றது. இதில் பங்கேற்ற மக்கள் உரக்க சிரித்து இந்த ஆண்டில் ஏற்பட்ட கவலைகளை மறந்தனர்.

சிரிப்பை குறிக்கும் வார்த்தைகள் கொண்ட பதாகைகளை ஏந்தி மக்கள் கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஜப்பானில் லிபரல் கட்சி தலைமையிலான ஆட்சி நடைபெற்று வருகிறது. அந்த நாட்டின் பிரதமராக ஷிகெரு இஷிபா உள்ளார். இந்த நிலையில் மக்களின் உடல், மன நலனைக் காக்கும் பொருட்டு ஒருநாளுக்கு ஒருமுறையாவது அவர்கள் சிரித்திட வகைசெய்யும் வகையில் புதிய சட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்பட் டுள்ளது. ஒவ்வொரு மாதத்தின் எட்டாவது நாள், "சிரிப்பின் மூலம் ஆரோக்கியம் மேம்படும் நாள்" எனக் கொண்டாடப் படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகமாக சிரிப்பவர்கள் உடல் ஆரோக்கியத்துடன் நீண்ட நாள் வாழ்வதாக யமகட்டா பல்கலைக்கழக கத்தால் நடத்தப்பட்ட ஆய்வில் கண்டறியப்பட்டது. மன இறுக்கத்தை சிரிப்பு பயிற்சி குறைப்புதுடன் இதயப் பாதிப்பு உள்ளிட்ட தீவிரப் பாதிப்புகளிலிருந்து பாதுகாப்பதாகவும் ஆராய்ச்சியாளர்கள் கூறினர்.

இந்த நிலையில் 2025 புத்தாண்டு பிறக்க இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், 2024 ஆம் ஆண்டில் பட்ட வேதனைகள், சோகங்களை மறக்கும் வகையில் ஜப்பானில் ஒசாகாவில் ஒருவருக்கொருவர் சிரித்து மகிழும் திருவிழா நடைபெற்றது.

இதில் ஏராள மானோர் கலந்து கொண்டனர். சுமார் 20 நிமிடங்கள் வரை வாய்விட்டு சிரித்து மக்கள் தங்கள் கவலைகளை மறந்தனர். (எ)

# மத்திய தரைக்கடலில் மூழ்கிய ரஷ்ய கப்பல்

## 14 மாலுமிகள் உயிருடன் மீட்பு

மொஸ்கோ, டிசெ.26

மத்திய தரைக்கடலில் ரஷ்ய சரக்கு கப்பல் ஒன்று மூழ்கியது.

ரஷ்யாவின் ஜெயின் பீற்றர்ஸ் பெர்க் நகரிலிருந்து விளாடி வொஸ்டோக் நகரில் உள்ள துறைமுகத்துக்கு சரக்கு கப்பல் புறப்பட்டது. அந்தக் கப்பலில் 16 மாலுமிகள் பயணித்தனர்.

இந்த நிலையில், மத்திய தரைக்கடல் வழியாக கப்பல் சென்றுகொண்டிருந்தது. ஸ்பெயினின் அகுலியாஸ், அல்ஜீரியாவின் ஓரன் நகரங்களுக்கு அருகே சர்வதேச கடல்பரப்பில் மத்திய தரைக்கடலில் சென்று கொண்டிருந்தபோது கப்பலின் இயந்திர அறையில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

தீ மளமளவென கப்பலின் பிற பகுதிகளுக்கும் பரவியது. இந்தத் தீ விபத்து குறித்து தகவலறிந்த ஸ்பெயின் கடற்படையினர் மற்றும் அப்பகுதியில் சென்றுகொண்டிருந்த பிற கப்பல்கள் மீட்புப் பணியில் ஈடுபட்டன. இதில் ரஷ்ய கப்பலில் இருந்து 14 மாலுமிகள் உயிருடன் மீட்கப்பட்டனர். (எ)

# ஈபிள் கோபுரத்தில் தீ விபத்து

பாரிஸ், டிசெ.26

உலகளவில் மிக முக்கிய சுற்றுலா தலங்களில் ஒன்றாக விளங்கும் பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் அமைந்துள்ள ஈபிள் கோபுரத்தில் தீ விபத்து ஏற்பட்டது. இதையடுத்து அங்கிருந்த சுமார் 1200 சுற்றுலாப் பயணிகள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். தொடர்ந்து தீயணைப்பு படையினர் தீயை அணைத்தனர்.

ஈபிள் கோபுரத்தை நாள்தோறும் உள்நாடு மற்றும் வெளிநாடு என சுமார் 25,000 மக்கள் பார்வையிடுவது வழக்கம். இந்தச் சூழலில் தான் அதில் தீ விபத்து ஏற்பட்டது.

ஈபிள் கோபுரத்தில் உள்ள கேபிளில் ஏற்பட்ட அதீத வெப்பம் தான் தீ விபத்துக்கு காரணம் என்ற தகவல் வெளியாகியுள்ளது. தீ பற்றியதை அடுத்து சுற்றுலாப் பயணிகள் வெளியேற்றப்பட்டனர்.

தொடர்ந்து தீயணைப்பு படையினர் போராடி தீயை அணைத்தனர். (எ)

# பொலிஸ் அதிகாரியிடமிருந்து 8 கோடி சொத்துகள் பறிமுதல்

புதுடில்லி, டிசெ. 26

இந்தியாவின் மத்திய பிரதேசத்தில் லோக் ஆயுக்தா பொலிஸார் நடத்திய சோதனையில், ஓய்வுபெற்ற பொலிஸ் அதிகாரிக்குச் சொந்தமான 8 கோடி ரூபாய் பெறுமதியான அசையும் சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன.

மத்திய பிரதேசத்தில் அரசு போக்குவரத்துத் துறையில் பொலிஸ் உத்தியோகத்தராக பணியாற்றியவர் ஆர். கே. சர்மா, 2015 இல் உயிரிழந்தார். இதையடுத்து, அவரது மகன் சௌரப் சர்மாவுக்கு கருணை அடிப்படையில் மாநில போக்குவரத்து துறையில் பொலிஸ் உத்தியோகத்தர் பணி வழங்கப்பட்டது. அவர் கடந்த 2023ஆம் ஆண்டு விருப்ப ஓய்வு பெற்றார். இவர் பணியில் இருந்தபோது ஊழல் செய்ததாகவும் இதன்மூலம் ஈட்டிய பணத்தைக் கொண்டு, தாய், மனைவி உள்ளிட்ட குடும்பத்தினர், நண்பர்கள் பெயரில் பாடசாலை, ஹோட்டல் என ஏராளமான சொத்துகளை வாங்கிக் குவித்ததாக குற்றச்சாட்டு எழுந்தது.

இந்த நிலையிலேயே சொத்துகள் பறிமுதல் செய்யப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி அசத்தல் வெற்றி

## ஹர்லீன் தியோல் அதிரடி சதம்




புதுடில்லி, டிசெ.26

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான இரண்டாவது ஒருநாள் போட்டியில் 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் இந்திய அணி வெற்றி பெற்றது.

மேற்கு இந்திய தீவுகள் மகளிர் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. இதில் நடைபெற்ற முதல் போட்டியில் இந்தியா வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது. இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 2ஆவது போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அபாரமாக விளையாடி 50 ஓவர்களில் 5 விக்கெட்களை இழந்து 358 ஓட்டங்கள் குவித்தது. இந்தியா தரப்பில் ஹர்லீன் தியோல் 115 ஓட்டங்களும், பிரதிகா ரவால் 76 ஓட்டங்களும், மந்தனா 53 ஓட்டங்களும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் 52 ஓட்டங்களும் எடுத்தனர்.

இதனையடுத்து 359 ஓட்டங்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி களமிறங்கிய மேற்கு இந்திய தீவுகள் அணியின் வீராங்கனைகள் இந்திய பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் விக்கெட்களை பறிகொடுத்தனர்.

அணித் தலைவி ஹெய்லி மேத்யூஸ் மட்டும் தனி ஆளாக போராட மறுமுனையில் அவருக்கு ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. 46. 2 ஓவர்கள் தாக்குப்பிடித்த மேற்கு இந்திய தீவுகள் அணி 243 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் பறிகொடுத்தது. இதன் மூலம் 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்ற இந்தியா 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2 - 0 என்ற கணக்கில் ஆரம்பத்திலேயே கைப்பற்றி அசத்தியுள்ளது.

மேற்கு இந்திய தீவுகள் அணி தரப்பில் அதிகபட்சமாக ஹெய்லி மேத்யூஸ் 106 ஓட்டங்கள் அடித்தார். இந்தியா தரப்பில் அதிகபட்சமாக பிரியா மிஸ்ரா 3 விக்கெட்கள் வீழ்த்தினார். இந்தப் போட்டியின் ஆட்ட நாயகியாக ஹர்லீன் தியோல் தெரிவு செய்யப்பட்டார். (எ)

# இந்தியா - அவுஸ்திரேலியா மோதும் நாலாவது டெஸ்ட் இன்று ஆரம்பம்

மெல்பேர்ண், டிசெ.26

இந்தியா - அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான நாலாவது டெஸ்ட் போட்டி மெல்பேர்ணில் இன்று தொடங்குகிறது.

அவுஸ்திரேலியாவுக்கு சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்றுள்ளது. இதுவரை நடந்துள்ள 3 டெஸ்ட் போட்டிகள் முடிவில் தொடர் 1 - 1 என்ற கணக்கில் சமனில் உள்ளது. ஒர் ஆட்டம் சமனில் முடிந்தது.

இதனையடுத்து இவ்விரு அணிகளுக்கும் இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி மெல்பேர்ணில் இன்று வியாழக்கிழமை தொடங்குகிறது. இலங்கை நேரப்படி அதிகாலை 5 மணிக்கு போட்டி தொடங்குகிறது. கிறிஸ்மஸ் பண்டிகைக்கு மறுநாள் "பொக்ஸிங் டே" என்ற பாரம்பரிய சிறப்புடன் தொடங்கும் இந்தப் போட்டிக்காக இந்திய வீரர்கள் கடந்த 21ஆம் திகதியில் இருந்து அங்கு பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், இந்தப் போட்டியில் இந்திய அணி இரண்டு சுழற்பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ரவீந்திர ஜடேஜா மற்றும் வாஷிங்டன் சுந்தர் இருவரும் விளையாடவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இதே வேளை, நிதிஷ் குமார் ரெட்டிக்கு இன்றைய ஆட்டத்தில் இடம்கிடைக்காது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், இன்றைய ஆட்டத்தில் ஜெய்ஸ்வாலுடன், ரோஹித் சர்மா தொடக்க வீரராக களமிறங்கவுள்ளதாகவும். ராகுல் 3ஆம் இடத்தில் விளையாடவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. சுப்மன் கில் எந்த இடத்தில் விளையாடுவார் என்பது குறித்து தகவல் வெளியாகவில்லை. (எ)

# இலங்கை அணி அறிவிப்பு

கொழும்பு, டிசெ.26

நியூசிலாந்து அணிக்கு எதிரான ஒருநாள் போட்டித் தொடரில் பங்கேற்கும் இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப் பயணம் மேற்கொண்டு தலா 3 போட்டிகள் கொண்ட ரி - 20 மற்றும் ஒருநாள் (50 ஓவர்கள்) தொடர்களில் விளையாடவுள்ளது. இதில், முதலில் ரி - 20 தொடரும் அதனைத் தொடர்ந்து ஒருநாள் போட்டிகளும் நடைபெறவுள்ளன.

இதன்படி ரி - 20 தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி தொடங்கவுள்ளது. ஒருநாள் போட்டிகள் ஜனவரி 5, 8 மற்றும் 11 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ளன. இந்தத் தொடர்களுக்கான நியூசிலாந்து அணி ஏற்கனவே அறிவிக்கப்பட்டு விட்டது.

இந்த நிலையில் இந்தத் தொடரின் ஒருநாள் போட்டிகளுக்கான இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது. சரித் அசலங்க தலைமையிலான அணியில் முன்னணி சுழற்பந்து வீச்சாளரான வனிந்து ஹசரங்க நீண்ட நாட்கள் கழித்து இடம்பெற்றுள்ளார்.

இலங்கை அணி விவரம் வருமாறு, சரித் அசலங்க, பதும் நிஸ்ஸங்க, அவிஷ்க பெர்னாண்டோ, நிஷான் மதுஷ்க, குசல் மெண்டிஸ், கமிந்து மெண்டிஸ், ஜனித் லியனகே, நுவனிது பெர்னாண்டோ, துனித் வெல்லாலகே, வனிந்து ஹசரங்க, மஹீஷ் தீக்ஷனா, ஜெப்ரி வன்டர்சே, சமிது விக்கிரமசிங்க, அஷித பெர்னாண்டோ, முகமது சிராஸ், லஹிரு குமரா மற்றும் எஷன் மலிங்க ஆகியோர் அணியில் இடம்பிடித்துள்ளனர். (எ)

# மனுவை கிரிக்கெட் விளையாட ஊக்கப்படுத்தியிருக்க வேண்டும்

## விருது கிடைக்காததால் தந்தை விரக்தி



புதுடில்லி, டிசெ.26

எனது மகளை கிரிக்கெட் வீராங்கனையாக்கி இருக்க வேண்டு என்று மனு பாக்கரின் தந்தை மனவேதனை அடைந்துள்ளார்.

பாரிஸ் நகரில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் துப்பாக்கி சுடுதலில் இந்தியா சார்பில் பங்கேற்று 2 வெண்கல பதக்கங்களை வெ 'றவர் மனு பாக்கர். இந்த நிலையில், விளையாட்டுத் துறையில் சிறந்த வீரர், வீராங்கனைக்கு அளிக்கப்படும் கேல் ரத்னா விருதுக்கான 30 பேர் கொண்ட பட்டியலில் மனுவின் பெயர் இடம் ஸ்ரீபெறவில்லை. இதனால் வருத்தமடைந்த மனு, அவருடைய தந்தையிடம் விரக்தியில் பேசியுள்ளார்.

இதுபற்றி மனுவின் தந்தை கூறும்போது, துப்பாக்கி சுடுதலில் மனுவை பயிற்சி பெற வைத்ததற்காக நான் வருந்துகிறேன். அவரை கிரிக்கெட் வீராங்கனையாக்கி இருக்க வேண்டும். அதன்பின்னர், எல்லா விருதுகளும் பாராட்டுகளும் மனுவை தேடி வந்திருக்கும்.

ஒலிம்பிக்கில் 2 பதக்கங்களை மனு வென்று கொடுத்திருக்கிறார். வேறு ஒருவரும் இதுபோன்று இதற்கு முன்பு செய்தது இல்லை. நாட்டுக்காக எனது மகள் இன்னும் என்ன செய்ய வேண்டுமென நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்? என வேதனையுடன் கேட்டுள்ளார்.

மனுவின் முயற்சிகளை அரசு அங்கீகரித்தேயாக வேண்டும். மனுவிடம் நான் பேசினேன். அவர் மனமுடைந்து போயிருக்கிறார். அவர், நான் ஒலிம்பிக்கிற்கு போயிருக்கக் கூடாது. நாட்டுக்காக பதக்கங்களை வென்றிருக்கக் கூடாது என மனு என்னிடம் கூறினார் என்று அவரின் தந்தை வருத்தத்துடன் கூறியுள்ளார்.

கேல் ரத்னா விருதுக்காக இணையத்தளம் வழியே மனு, விண்ணப்பித்துள்ளார். ஆனால், அவருடைய பெயர் விருது பட்டியலில் இல்லை. இதனால், அவர் அதிருப்தி அடைந்துள்ளார். (எ)

# தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் முதல் டெஸ்ட் இன்று தொடக்கம்

சென்சூரியன், டிசெ.26

தென்னாபிரிக்கா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி இன்று தொடங்குகிறது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20, 3 ஒருநாள் மற்றும் 2 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது.

இதில், முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 2 - 0 என தென்னாபிரிக்கா கைப்பற்றியது. தொடர்ந்து நடைபெற்ற ஒருநாள் தொடரை 3-0 என பாகிஸ்தான் கைப்பற்றி தென்னாபிரிக்காவுக்கு அதிர்ச்சி கொடுத்தது.

இதையடுத்து இவ்விரு அணிகள் இடையிலான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் இன்று தொடங்குகிறது. முதல் டெஸ்ட் போட்டி சென்சூரியனில் தொடங்குகிறது. இந்த நிலையில், இந்த போட்டியில் விளையாடும் வீரர்களை தென்னாபிரிக்கா அணி அறிவித்துள்ளது.

இதன்படி, தலைவராக தெம்பா பவுமாவும், விக்கெட் காப்பாளராக கைல் வெர்ரையனும் செயல்படவுள்ளனர். மேலும், இந்த அணியில் கார்பி போஷ் அறிமுக வீரராக இடம் பிடித்துள்ளார்.

தென்னாபிரிக்கா அணி விவரம்: டோனி டி ஜோர்ஜி, எய்டன் மார்க்ரம், ரியான் ரிக்கெல்டன், ட்ரிஸ்டன் ஸ்டப்ஸ், தெம்பா பவுமா , டேவிட் பெட்டிங்ஹாம், கைல் வெர்ரையன், மார்க்கோ ஜான்சன், கார்பின் கோஷ், ககிசோ ரபாடா, டேன் பேட்டர்சன் ஆகியோர் அணியில் இடம் பிடித்துள்ளனர். (எ)

# மீண்டும் தொடக்க வீரராக களமிறங்கும் ரோஹித் சர்மா

மெல்பேர்ண், டிசெ.26

இந்திய அணியின் தலைவர் ரோஹித் சர்மா மீண்டும் தொடக்க வீரராக களமிறங்கவுள்ளார்.

இந்தியா - அவுஸ்திரேலியா இடையிலான 4ஆவது டெஸ்ட் போட்டி இன்று தொடங்குகிறது.



இந்தப் போட்டியில் ரோஹித் சர்மா மீண்டும் தொடக்க வீரராக களமிறங்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது . கடந்த 2 டெஸ்ட் போட் டிகளிலும் ரோஹித் சர்மா 6 ஆறாவது வீர ராக களமிறங்கினார். ஆனால் அவர் எதிர் பார்த்த அளவு செயல்படவில்லை. இந்த நிலையில் இன்றைய போட்டியில் ரோஹித் சர்மா மீண்டும் தொடக்க வீரராக களமிறங்கவுள்ளார். இதனால் கடந்த போட்டிகளில் ஜெய்ஸ்வாலுடன் இணைந்து தொடக்க வீரராக களமிறங்கிய கே. எல். ராகுல் ஆறாவது வீரராக களமிறங்குவார் என்று தெரி விக்கப்பட்டுள்ளது. (எ)

# சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் தொடர் அட்டவணை வெளியீடு

டுபாய், டிசெ.26

9ஆவது ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி தொடர் பாகிஸ்தானில் அடுத்த ஆண்டு பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ளது. இதில் பங்கேற்கும் 8 அணிகள் இரு பிரிவாக பிரிக்கப்பட்டுள்ளன. "ஏ" பிரிவில் இந்தியா, பாகிஸ்தான், நியூசிலாந்து, பங்களாதேஷ் அணிகளும், "பி" பிரிவில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, தென்னாபிரிக்கா, ஆப்கானிஸ்தான் அணிகளும் இடம்பெற்றுள்ளன. பெப்ரவரி 19ஆம் திகதி கராச்சியில் தொடங்கும் முதல் ஆட்டத்தில் நடப்பு சம்பியன் பாகிஸ்தான் அணி, நியூசிலாந்தை சந்திக்கிறது.

இதில் இந்திய அணிக்குரிய ஆட்டங்களும் , முதலாவது அரையிறுதியும் டுபாயில் நடைபெறவுள்ளன. எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள இந்தத் தொடரின் முக்கியமான இந்தியா - பாகிஸ்தான் இடையிலான போட்டி பெப்ரவரி 23ஆம் திகதி அமீரகத்தில் உள்ள டுபாயில் நடக்கவுள்ளது. முன்னதாக பெப்ரவரி 20ஆம் திகதி பங்களாதேஷையும், மார்ச் 2ஆம் திகதி நியூசிலாந்தையும் இந்திய அணி எதிர்கொள்கிறது.

இந்திய அணி இறுதிப்போட்டிக்கு வராவிட்டால் இறுதிப்போட்டி பாகிஸ்தானிலேயே நடைபெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சில அத்தியாவசிய...

இதன்படி இந்த வாரம் ரின் மீன் உள்ளிட்ட சில பொருட்களுக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்படும் என அமைச்சர் கூறினார். (அ)

## வடக்கில்...

வயாவிளான், பலாலி தெற்கு, பலாலி கிழக்கு மக்களின் அழைப்பின் பேரில் வடக்கு மாகாண ஆளுநர் தலைமையில் விடுவிக்கப்பட்ட காணிகளில் விவசாய நடவடிக்கை தொடர்பான கலந்துரையாடலும், பூனையன்காடு இந்து மயானத்தில் மர நடுகையும் நேற்று புதன்கிழமை காலை வயாவிளானில் நடைபெற்றது.

அந்தப் பிரதேச மக்கள் சார்பில் கருத்துத் தெரிவித்த உ.சந்திரகுமாரன், வடக்கு மாகாண ஆளுநர் வேதநாயகன் இந்த மண்ணை நேசிக்கும் ஒருவர். நாம் தற்போது எடுத்தோம் கவிழ்த்தோம் எனச் செயற்பட முடியாது. கட்டம் கட்டமாக எமது காணிகளை விடுவிக்க ஆளுநர் நடவடிக்கை எடுப்பார் என நாம் முழுமையாக நம்புகின்றோம்.

பலாலி வீதியில் வசாவிளான் சந்தி வரையான வீதி விடுவிக்கப்படும் என நாம் எதிர்பார்த்திருக்கவில்லை. ஆனால் இந்த அரசாங்கத்தின் காலத்தில் ஆளுநரின் கோரிக்கையால் அது நடைபெற்றது. அதேபோன்று ஏனைய இடங்களும் நாம் எதிர்பாராத நேரத்தில் விடுவிக்கப்படும் என நம்புவோம்.

அரசியல் கலப்பற்று ஒற்றுமையாக இது நடைபெறவேண்டும். அதைவிட எமது விடுவிக்கப்பட்ட பகுதிகளில் எம் முன்னோர்கள் நினைவாக மரங்களை நட்டு பசுமைத் தேசமாக மாற்றுவோம் - என்றார்.

இதன் பின்னர் உரையாற்றிய வடக்கு ஆளுநர், 2015ஆம் ஆண்டு காலத்தில் யாழ். மாவட்ட செயலராக நான் இருந்த போது படிப்படியாக பல பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டன. விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் குடியமரவில்லை என பாதுகாப்புத் தரப்பினர் எங்களுக்கு திரும்பத் திரும்ப சொல்லிக்கொண்டிருந்தனர். அந்த நேரத்தில் வீட்டுத் திட்டங்களை நாம் நடைமுறைப்படுத்தினோம். மக்களும் எதிர்பார்த்ததைப் போன்று மீள்குடியமர்ந்தார்கள்.

2018ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஏற்பட்ட அரசியல் குழப்பத்தை தொடர்ந்து காணி விடுவிப்புக்கள் நடைபெறவில்லை. இந்த ஆண்டு சிறிய அளவில் காணிகள் விடுவிக்கப்பட்டிருக்கின்றன. விடுவிக்கப்பட்ட காணிகளை விவசாயபூமியாக மாற்றுவதுதான் நீங்கள் எங்களுக்கு செய்யும் உதவி.

இடம்பெயர்ந்தவர்களின் வலி எனக்கும் தெரியும். நானும் இடம்பெயர்ந்த ஒருவன்தான். தற்போது யாழ். மாவட்ட இராணுவத்த தளபதியாக நியமிக்கப்பட்டுள்ள யஹம்பத் நேர் சிந்தனை உடைய ஒருவர். எனவே இந்த அரசாங்கத்தின் காலத்தில் படிப்படியாக காணிகளை விடுவிக்க முடியும் என நம்புகின்றோம்.

இங்கு காணிகள், வீதிகள் விடுவிக்கப்பட்டதும் தென்னிலங்கையிலிருந்து சில தேவையற்ற கருத்துக்கள் வெளியிடப்பட்டு அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. தென்னிலங்கை மக்களுக்கு இங்கு நடைபெறுவது என்ன என்ற உண்மையை தெளிவுபடுத்துமாறு என்னைச் சந்தித்த தென்னிலங்கையை சேர்ந்த சிவில் சமூகக் குழுக்களிடம் தெரிவித்திருக்கின்றேன். வடக்கு மக்கள் எல்லோருக்கும் எதிர் பார்ப்பு இருக்கின்றது என்பது எனக்குத் தெரியும். விரைவில் சாதகமான விட யங்கள் நடக்கும் என நம்புகின்றேன் - என்று தெரிவித்தார்.

இதன் பின்னர் அந்தப் பிரதேசத்தில் வடக்கு ஆளுநரால் மரக்கன்றுகள் நடுகை செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் தெல்லிப்பழை பிரதேச செயலர், வலி. வடக்கு பிரதேச சபை செயலர், தெல்லிப்பழை பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர், வலி. வடக்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஆகியோர் பங்கேற்றனர். (அ-02-05)

# தபால் திணைக்களத்தை நவீனமயப்படுத்த திட்டம்

கொழும்பு, டிசெ. 26

இலங்கை தபால் திணைக்களம் நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி மிகவும் புதுமையான, திறமையான மற்றும் நம்பகமான தபால் சேவையை கட்டியெழுப்ப திட்டமிட்டுள்ளதாக சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் கீழ் இயங்கும் இலங்கை தபால் தலைமையகத்தின் தற்போதைய சேவை நடவடிக்கைகள் மற்றும் எதிர்கால திட்டங்கள் தொடர்பில் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ விசேட கலந்துரையாடலொன்றில் ஈடுபட்டார்.

இலங்கை தபால் திணைக்களத்தினால் தற்போது வழங்கப்படும் சேவைகள், தற்போதைய திட்டங்கள், எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள், தற்போதைய சவால்கள், பிரச்னைகள் மற்றும் இலங்கை தபால் முகங்கொடுக்கும் ஏனைய பிரச்சினைகள் குறித்து இதன் போது விசேட அவதானம் செலுத்தப் பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த அமைச்சர், இலங்கை தபால் திணைக்களம் சரியான நோக்கத்துடனும் திட்டத்துடனும் செயற்படுவதாகத் தோன்றுவதாகவும், தற்போதுள்ள பிரச்சினைகளை தீர்த்து இந்த வரலாற்று சேவையை தேசிய சேவையாக நவீனப்படுத்தி பேணுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

குறிப்பாக அரசியல் அல்லது தனிப்பட்ட தேவைகளின் அடிப்படையில் புதிய தபால் நிலையங்களை நிறுவுவது எதிர்காலத்தில் இடம்பெறாது. தபால் திணைக்களத்தின் எதிர்காலத் திட்டங்களை குறைந்தபட்சம் அடுத்த 10 வருடங்களை இலக்காக கொண்டு செயல்பட வேண்டும். திணைக்களம் தொடர்பான திட்டமொன்றை உரிய புரிந்துணர்வுடன் செயற்படுத்துவதுடன், அதற்காக திணைக்களம் தயார்படுத்தப்பட வேண்டுமென அமைச்சர் சுட்டிக்காட்டினார். (அ)

# மின் கம்பிகள் திருடப்படுவதை கட்டுப்படுத்த புதிய நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 26

கட்டுநாயக்க-கொழும்பு அதிவேக நெடுஞ்சாலைக்கு மின்சாரம் வழங்குவதற்காக பதிக்கப்பட்ட மின் கம்பிகள் மர்ம நபர்களினால் திருடப்படுவதை தடுக்க பொலிஸ் விசேட அதிரடிப்படையினரை ரோந்து நடவடிக்கையில் ஈடுபடுத்தத் தீர்மானித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

அண்மைக் காலமாக கட்டுநாயக்க - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலைக்கு மின்சாரம் வழங்குவதற்காக பதிக்கப்பட்ட மின் கம்பிகள் திருடப்படுவதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த நிலையில், குறித்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபாலவிடம் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவினால் கோரப்பட்டது.

இதனையடுத்து நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் -

கட்டுநாயக்க - கொழும்பு அதிவேக நெடுஞ்சாலைக்கு மின்சாரம் வழங்குவதற்காக பதிக்கப்பட்ட மின் கம்பிகள் திருடப்படுவதை தடுக்க பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஈடுபடுத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வாறு மின்சார கம்பிகளை துண்டிப்பதைத் தடுக்க இரவு வேளையில் நெடுஞ்சாலைகளில் விசேட அதிரடிப்படையினர் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபடுவார்கள் எனவும் போதைக்கு அடிமையானவர்களே குறித்த செயலில் அதிகளவில் ஈடுபட்டு வருகின்றனர் எனவும் குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# போதைப்பொருள் குற்றச்சாட்டில் சிறைக்கு செல்வோர் அதிகரிப்பு

கொழும்பு, டிசெ. 26

போதைப்பொருள் தொடர்பான குற்றங்களால் சிறையில் அடைக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் சிறைச்சாலைகளில் அசாதாரண நெரிசல் ஏற்பட்டுள்ளதாக தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஆகஸ்ட் மாதம் 27ஆம் திகதி வரையில், நீர் கொழும்பு சிறைச்சாலையில் உள்ள மொத்த 2225 கைதிகளில் 1442 பேர் போதைப்பொருள் குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர், இது 65 வீதமாகும்.

அதே ஆண்டு செப்ரெம்பர் மாதம் 19ஆம் திகதி வரையில் களுத்துறை சிறைச்சாலையில் உள்ள மொத்த 1275 கைதிகளில் 885 பேர் போதைப்பொருள் குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளதுடன், அது 69 வீதம் என தேசிய கணக்காய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, சிறைச்சாலைகள் திணைக்களமானது, 2023ஆம் ஆண்டில் ஊழியர் சம்பளம் மற்றும் இதர கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக மேலதிக நேர மற்றும் விடுமுறை கொடுப்பனவுகளுக்காக மாத்திரம் 9820 இலட்சம் ரூபாயை செலவழித்துள்ளதாக தேசிய தணிக்கை அலுவலகம் வெளியிட்டுள்ள கணக்காய்வு அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளது.

குறித்தத் தொகையானது 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 1060 இலட்சம் ரூபாய் அதிகரிப்பு என கணக்காய்வு அறிக்கை கூறுகின்றது. (அ)

## தேசிய...

நிலையம் வலியுறுத்தியுள்ளது.

இன்று அனுஷ்டிக்கப்படவுள்ள தேசிய பாதுகாப்பு தினத்திற்கு இணையான பிரதான நிகழ்வு பாதுகாப்பு அமைச்சின் அனர்த்த முகாமைத்துவ பிரிவு வளாகத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வு பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகர தலைமையில் இடம்பெறவுள்ளது.

இதுதவிர, மாவட்ட மட்ட நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (அ)

## மனிதநேயம்...

அவர் அதில் மேலும் தெரிவிக்கையில்-

இன்று இலங்கைக்குத் தேவையான சமூக மாற்றம் என்பது பாரியதொரு சமூக மாற்றமாகும். சுதந்திரம் அடைந்து 76 ஆண்டுகளுக்குப் பிறகு, ஒரு சில துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு அப்பாற்பட்ட முழு சமூக மாற்றமாகும். இது ஒரு மறுமலர்ச்சியாகும். அந்தத் தேசிய மறுமலர்ச்சிக்காக மிகுந்த அர்ப்பணிப்பு, பொறுமை, நிதானம், அடங்காத துணிச்சல், இடையறாத முயற்சியுடன் பணியாற்றும் நமது அரசைச் சுற்றி திரண்டிருக்கும் ஆயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கைகள் எந்த வகையிலும் வீழ்ச்சியடைய விடாது அவர்கள் எதிர்பார்க்கும் “வளமான நாடு-அழகான வாழ்க்கையை“ உருவாக்கும் ஒரே குறிக்கோளுடன், மென்மேலும் வீரியத்துடனும் உறுதியுடனும் தன்னை அர்ப்பணிப்பேன் என்பதை புனித நத்தார் தினத்தில் மீண்டும் வலியுறுத்துகிறேன் -என்றார். (அ)

## உதயகம்மன்பில...

இன்று இந்த நாடு அனுபவித்துக் கொண்டிருக்கிறது.

எனவே அவ்வாறானவர்களின் கருத்துக்களுக்கு பதிலளித்து நேரத்தை வீணடிக்க நாம் விரும்பவில்லை. அவர் எமக்கு கற்றுக் கொடுக்கவும் தேவையில்லை - என்றார். (அ)

## இலங்கையுடன்...

அரசமுறை விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.

அதனையடுத்து எதிர்வரும் ஜனவரி மாதம் அவர் சீனாவுக்கான உத்தியோக பூர்வ விஜயத்தை மேற்கொள்ளவிருக்கும் நிலையில், நேற்று முன்தினம் பீஜிங்கில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் இது குறித்து ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“சீனாவும், இலங்கையும் ஒருவருக்கொருவர் அவசியமான உதவிகளை வழங்குகின்ற, நீண்டகால நட்புறவைக் கொண்டிருக்கின்ற ஒத்துழைப்புப் பங்காண்மை நாடுகளாகும். இருநாடுகளுக்கும் இடையில் மிகநெருக்கமான உயர்மட்டத் தொடர்புண்டு. அத்தகைய உயர்மட்டத் தொடர்புகளைப் பேணுவதற்கும், இருநாடுகளுக்கும் இடையிலான பாரம்பரியத்தொடர்பு களை முன்கொண்டுசெல்வதற்கும், இருநாடுகளுக்கும் இடையிலான பல் துறைசார் ஒத்துழைப்பை விரிவுபடுத்து வதற்கும் சீனா தயாராக இருக்கிறது” எனவும் பேச்சாளர் மாவோ நிங் மேலும் குறிப்பிட்டார். (அ)

## அரசியல்வாதி...

அவர் மேலும் தெரிவிக்கையில்-

2005 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து நிதி பெற்றுக் கொண்டவர்களின் பெயர் விவரங்களை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

உண்மையில் ஒருசில அரசியல்வாதிகள் தங்களின் மருத்துவ சிகிச்சைக்காக 1 முதல் 10 இலட்சம் ரூபா வரையிலான நிதியை பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

இலங்கையில் மருத்துவ சிகிச்சை பெறுவதற்கான சாத்தியம் காணப்பட்ட போதிலும் ஒரு சிலர் ஜனாதிபதி நிதியத்தில் இருந்து பல கோடி ரூபாவை பெற்றுக்கொண்டு வெளிநாடுகளுக்குச் சென்று மருத்துவ சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளார்கள்.

ஏழ்மை நிலையில் உள்ள மக்களின் நலன் கருதியே 1978 ஆம் ஆண்டு ஜனாதிபதி நிதியம் ஸ்தாபிக்கப்பட்டது. அரசியல் அதிகாரத்தை பயன்படுத்தி பல கோடி ரூபா கணக்கில் நிதி பெற்றுக் கொண்டுள்ளமை முற்றிலும் முறையற்றதொரு செயற்பாடாகும்.

ஒரு சில அரசியல்வாதிகளின் தவறான செயற்பாடுகளினால் ஒட்டுமொத்த அரசியல்வாதிகளின் பெயருக்கு களங்கம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே ஜனாதிபதி நிதியத்தில் இருந்து முறையற்ற வகையில் நிதி பெற்றுக்கொண்டவர்களுக்கு எதிராக விசாரணைகளை மேற்கொண்டு அந்த நிதியை மீளப்பெறுவதற்கு அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## சவேந்திர சில்வாவின் பதவி நீடிப்பு; தீர்மானம் இல்லை என்கிறது அரசு

கொழும்பு, டிசெ. 26

பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பதவிக்காலத்தை நீடிப்பது தொடர்பில் இன்னமும் தீர்மானிக்கவில்லை என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

பாதுகாப்பு படைகளின் பிரதானியாக இருந்துவரும் ஜெனரல் சவேந்திர சில்வாவின் பதவிக்காலம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகின்றது.

எனினும் தற்போது வரை அவரது பதவிக்காலம் நீடிக்கப்படுமா இல்லை அப்பதவிக்கு புதியவர் நியமிக்கப்படுவாரா என்பது தொடர்பில் எவ்விதமான அறிவிப்புக்களும் வெளியிடப்படவில்லை.

இந்நிலையில், அமைச்சரவைப்பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ இந்த விடயம் சம்பந்தமாக கருத்து வெளியிடும்போது,

“பாதுகாப்புப் படைகளின் பிரதானி ஜெனரல் சவேந்திர சில்வாவின் பதவிக்காலம் சம்பந்தமாக இதுவரையில் எவ்விதமான தீர்மானங்களையும் எடுக்கவில்லை. அதுதொடர்பில் விரைவில் தீர்மானம் எடுப்போம்” என்று குறிப்பிட்டார்.

இலங்கையின் 23ஆவது இராணுவத் தளபதியாக மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா பதவி வகித்திருந்த நிலையில் 2022ஆம் ஆண்டு ஜூன் முதலாம் திகதி பாதுகாப்புப் படைகளின் பிரதானியாக முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவினால் நியமிக்கப்பட்டார்.

அதன் பின்னர் கடந்த ஜூன் மாதம் முதலாம் திகதி அவருடைய பதவிக்காலம் நிறைவுக்கு வந்திருந்த போதும் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இம்மாதம் 31ஆம் திகதி வரையில் பதவிக்காலத்தை நீடிப்பு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

## சீனாவின் ‘பீஸ் ஆர்க்’ கப்பலை பார்வையிட்ட பிரதமர் ஹரிணி



கொழும்பு, டிசெ. 26

சீன அரசாங்கத்தின் மிஷன் ஹார்மணி - 2024 திட்டத்தின் ஒரு பகுதியாக கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்த சீன கடற்படைக்கு சொந்தமான பீஸ் ஆர்க் என்ற மருத்துவமனை கப்பலை பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய பார்வையிட்டார்.

பீஸ் ஆர்க் என்ற இந்த கப்பல் டிசெம்பர் 21 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்ததுடன், டிசெம்பர் 22 முதல் டிசெம்பர் 27 வரை இலங்கை மக்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை மற்றும் பரிசோதனை சேவைகளைகளை வழங்கும்.

இந்த சமாதானக் கப்பல் திட்டத்தின் மனிதாபிமான முயற்சிகளைப் பாராட்டிய பிரதமர், இலங்கை மக்களுக்கு இந்த நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியதற்காக சீன அரசாங்கத்திற்குப் பாராட்டுக்களைத் தெரிவித்தார்.

இரு தரப்பு உறவுகளைப் பேணுவதற்கும் பொது சுகாதாரத் துறைக்கு ஆதரவளிப்பதற்கும் இத்தகைய முயற்சிகளின் முக்கியத்துவத்தை பிரதமர் வலியுறுத்தினார்.

இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான ஒத்துழைப்பை வலுப்படுத்தும் இந்த கப்பலின் பணியின் முக்கியத்துவத்தை சீனத் தூதுவர் வலியுறுத்தினார். கப்பலில் உள்ள நவீன வசதிகள் மற்றும் சேவைகள் குறித்து கப்பலின் மருத்துவக் குழுவினர் விளக்கமளித்தனர்.

இந்நிகழ்வில் இலங்கைக்கான சீனத் தூதுவர் கீ சென் ஹொங் பிரதமரின் செயலாளர் பிரதீப் சபுதந்திரி, கொமடோர் மேஜர் ஜெனரல் ஹீ யோங்மிங், கொமடோர் மேஜர் ஜெனரல் யிங் ஹொங்போ, கப்டன் டெங் கியாங் மற்றும் சீனத் தூதரக அதிகாரிகள் அடங்கிய குழுவினர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# மஹிந்தவுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ். அச்சுறுத்தல் என்பது பொய்!

### தேசிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 26

**ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் மக்கள் மத்தியில் அச்சமில்லாமல் செல்கிறார்கள். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் தாக்குதல் அச்சுறுத்தல் இருப்பதாக குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது. முன்னாள் ஜனாதிபதிகளை பராமரிப்பதற்கு கோடி கணக்கில் அரசு செலவு செய்யவேண்டிய தேவையில்லை என தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் தேவானந்த சுரவீர தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு மற்றும் வழங்கப்படுகின்ற சிறப்புச் சலுகைகளை குறைப்போம் என்று நாட்டு மக்களுக்கு வாக்குறுதியளித்தோம். நாட்டு மக்களும் இதனை முழுமையாக ஏற்றுக் கொண்டார்கள். துறைசார் நிபுணத்துவ குழுவின் அறிக்கைக்கு அமையவே முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்டிருந்த இராணுவ பாதுகாப்பு மீளப்பெறப்பட்டு, போதுமான அளவுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகள் அனைவருக்கும் வழங்கப்பட்டிருந்த இராணுவ பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டுள்ளது. ஆனால் மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு குறித்து மாத்திரம் தான் அதிகளவில் பேசப்படுகிறது.

மகிந்தவுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தாக்குதல் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும், ட்ரோன் கருவி ஊடான தாக்குதல் அச்சுறுத்தல் காணப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது. உயிர்த்த ஞாயிறு குண்டுத்தாக்குல் சம்பவங்களை நடத்தியவர்களுக்கு ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பின் தாக்குதல் பற்றி பேசுவது ஒன்றும் ஆச்சிரியத்துக்குரியதல்ல.

மகிஹிந்தவுக்கு உயிரச்சுறுத்தல் இருப்பதாக குறிப்பிடுவது முற்றிலும் பொய்யானது. கடந்த காலங்களில் மகிந்தவின் பாதுகாப்புக்கு வழங்கப்பட்ட இராணுவத்தினர் அவர்களின் தென்னந்தோப்புக்களை பராமரிப்பதற்கும், வீட்டு நாய்களை பராமரிப்பதற்கும் பயன்படுத்தப்பட்டதை மக்கள் அறிவார்கள்.

மகிந்தவின் உயிருக்கு அச்சுறுத்தல் காணப்படுவதாக குறிப்பிட்டுக் கொண்டு அவரை சார்ந்துள்ளவர்கள் அனுதாப அரசியல் இலாபம் தேடிக் கொள்கிறார்கள். நாட்டு மக்கள் இந்த பொய்யை ஏற்றுக் கொள்ள போவதில்லை - என்றார். (அ)

# இலங்கையில் உள்ள இந்தியன் வங்கிக்கு அபராதம் விதித்த இலங்கை மத்திய வங்கி!

கொழும்பு, டிசெ. 26

இலங்கையில் உள்ள இந்தியன் வங்கிக்கு இலங்கை மத்திய வங்கி அபராதம் விதித்துள்ளது.

2006 ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க இலங்சை நிதிப் பரிவர்த்தனை அறிக்கைச் சட்டத்தின் விதிகளுக்கு இணங்காதமை தொடர்பில் இந்திய அரசாங்கத்தின் இந்தியன் வங்கிக்கு இலங்கை மத்திய வங்கியின் நிதி உளவறிதல் பிரிவு அபராதம் விதித்துள்ளது.

அதற்கமைய, தங்களுக்கு இரண்டு மில்லியன் ரூபாய் அபராதமாக விதிக்கப்பட்டுள்ளதாக இந்தியன் வங்கி தெரிவித்துள்ளது. (அ)

# ஐ.நா. ஆராய்ச்சி நிறுவனத்துடன் அரசாங்கம் புரிந்துணர்வு ஒப்பந்தம்

கொழும்பு, டிசெ. 26

ஐக்கிய நாடுகள் சபையின் பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் வெளிவிவகார அமைச்சு, வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் மற்றும் சுற்றுலா அமைச்சுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்று கைச்சாத்திடப்படவுள்ளது.

ஒவ்வொரு தரப்பினரும் செயற்பாடுகளை வகுத்து நடை முறைப்படுத்தக் கூடிய ஒத்துழைப்பு வேலைச் சட்டகத்தைத் தயாரிப்பதற்கும், தற்போது காணப்படுகின்ற வளங்களைப் பயன்படுத்தி பரஸ்பர ரீதியாகப் பயன்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகளை வழங்குவதற்கும் இயலுமை கிட்டும் வகையில் இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் குறிப்பாக பேண்தகு அபிவிருத்திக்கான 2030 ஆம் ஆண்டு நிகழ்ச்சி நிரலை நடைமுறைப்படுத்துவதற்குரிய பயிற்சி மற்றும் கற்றல் ஒத்துழைப்புக்கள், இராஜதந்திரிகளுக்கான பயிற்சிகள், அனர்த்த இடர்களைக் குறைத்தல் மற்றும் நெருக்கடிகளை முகாமைத்துவம் செய்தல் மற்றும் பூகோளத் தகவல் தொழிநுட்பப் பயன்பாடு தொடர்பான பயிற்றுவித்தல்களை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கமைய, இரு தரப்பினர்களுக்கிடையே முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக வெளிவிவகாரம், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் சமர்ப்பித்துள்ள யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலை மூன்று மடங்குகளாக அதிகரிக்கும்

கொழும்பு, டிசெ. 26

இறக்குமதி செய்யப்படும் வாகனங்களின் விலைகள் மூன்று மடங்காக அதிகரிக்கும் என வாகன இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

2020ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபாய்க்கு நிகரான டொலரின் பெறுமதி பாரிய அளவில் அதிகரித்துள்ளது. அத்துடன், வாகனங்களுக்கு விதிக்கப்படும் அதிக வரிகள், இறக்குமதி செய்யப்படும் நவீன வாகனங்களின் விலைகள் உயர்வு உள்ளிட்ட காரணிகளால் கடந்த 2020ஆம் ஆண்டை விட மூன்று மடங்கு அதிகமாக புதிய வாகனங்கள் விற்பனை செய்யப்படும் எனவும் வாகன இறக்குமதியாளர்கள் கூறியுள்ளனர்.

ஜப்பானில் டொயோட்டா நிறுவனம் தயாரிக்கும் பஸ்ஸொன்று கடந்த 2020ஆம் ஆண்டில் 70 இலட்சம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டபோதிலும் அதன் புதிய விலை 2 கோடியாக இருக்கும் என்றும் இறக்குமதியாளர்கள் கூறினர்.

போக்குவரத்து, சுற்றுலா போன்ற துறைகளில் பயன்படுத்தப்படும் வாகனங்களின் இறக்குமதிக்கு கடந்த 14ஆம் திகதிமுதல் அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது. 2025ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் முதல் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி அளிக்கப்படும் என ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கடந்த பாராளுமன்ற அமர்வில் கூறியிருந்தார்.

இது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் ஜனவரி மாத நடுப்பகுதியில் சமர்ப்பிக்கப்பட உள்ளதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. அனுமதி கிடைத்தவுடன் தனியார் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பான நடவடிக்கைகள் தொடங்கப்படும் என இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் ... லிமிட்டெட் நிறுவனத்தினரால் 26.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org